REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 332 ஐப்பசி 12 ஆம் நாள் புதன்கிழமை 28 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## இலங்கை வந்தார் மைக் பொம்பியோ

கொழும்பு, ஒக்.28

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்தடைந்தார். ஆசியாவின் நான்கு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ 18

# தீவிரமாகிறது தொற்று ஒரேநாளில் மூவர் சாவு

## 19ஆக உயர்ந்தன உயிரிழப்புகள்

கொழும்பு, ஒக்ரோபர்.28

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மூவர் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நாட்டில் 19ஆக உயர்ந்துள்ளது. 18

## மணிவண்ணன் வழக்கு மீதான கட்டளை இன்று

கொழும்பு, ஒக்.28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விண்ணப்பம் மீதான கட்டளை இன்று வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டம் 18

## சமூகத் தொற்று இல்லை; உயிரிழப்புகள் சகஜமே!



சுகாதார அமைச்சர் விசித்திரமான விளக்கம்

கொழும்பு, ஒக்.28

இலங்கையில் கொரேர்னாவின் மூன்றாவது அலை இன்னமும் சமூகத் தொற்றாக மாறவில்லை. மினுவாங்கொடை ஆடைத்தொழிற் 18

பேலியகொட கொத்தணி மிகத் தீவிரம்

## அநாவசிய நடமாட்டத்தை உடனடியாகக் குறையுங்கள்

*யாழ். மாவட்ட மக்களிடம் சுகாதார அமைச்சர் வேண்டுகோள்*

கொழும்பு, ஒக். 28

பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணிப் பரவல் மிகவும் தீவிரமாக உள்ளது. இந்தப் பரவல் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பாதித்துள்ளது. இம் 18

## 40 பேருக்கு இன்று பி.சி.ஆர்.

யாழ்ப்பாணம், ஒக்.28

பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இருவர் யாழ்ப்பாணம், 02

*முச்சந்தி முரளி*

"இப்பதான் 'மாஸ்க்'கை பற்றியே புதிசா கண்டுபிடிக்கினம், இந்த லட்சணத்தில கொரோனாவை ஒழிக்கிறது நடக்கிற கதையோ?"



## குருநகர், பாசையூர் கடும் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் குருநகர், பாசையூர் பகுதிகள் பொலிஸாரால் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நான்கு இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு மக் 18

## கட்டுப்பாடு இழந்தது கார்; செலுத்திய இளைஞர் சாவு!

*அச்சுவேலியில் சோகம்*



யாழ்ப்பாணம், ஒக்.28

அச்சுவேலி, இராசவீதியில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார். விபத்தில் வசாவிளானைச் சேர்ந்தத.லக்ஸியசீலன் (வயது 34) என்பவரே உயிரிழந்துள்ளார். 23 வய 18



## 4 மணிநேரத்தின் பின் 'மாஸ்க்'கை மாற்றுங்கள்

கொழும்பு, ஒக்.28

முகக் கவசங்களை அதிக பட்சம் 4 மணித்தியாலங்கள் மாத்திரமே 18



## நேற்று 457

18

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Mobitel Master unlimited
உங்களுக்கு விருப்பமான UNLIMITED பக்கேஜைத் தெரிவு செய்யுங்கள்
UNLIMITED CALLS மாதாந்தம் ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED CALLS & DATA மாதாந்தம் ரூபா. 3,399/- மட்டுமே
அழையுங்கள் 1717
வரையறுக்கப்பட்ட சலுகை Mobitel.lk/master
Sri Lanka Telecom Mobitel

# அமெரிக்கத் தடையால் பிரச்சினை இல்லையாம்


## இராணுவத் தளபதி கூறுகிறார்

**கொழும்பு, ஒக்.28**
**நான் எதற்கும் அஞ்சும் நபர் கிடையாது, அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை நீக்கப்பட்டாலும், நீக்கப்படாவிட்டாலும்கூட எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் குறுகியகால பயணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அவர் சந்திப்புகளை நடத்தவுள்ளார். அதில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை நீக்குமாறு இலங்கை அரசின் சார்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது நான் வெளிப்படையானவன். எதற்கும் அஞ்சும் நபர் கிடையாது. அவ்வாறு அஞ்சியிருந்தால் இவ்வாறு துணிகரமாக செயற்பட்டிருக்கவும் மாட்டேன், வன்னி மனிதாபிமான நடவடிக்கையின்போது நான் என்ன செய்தேன், எனதுகீழ் இருந்த படையணி எவ்வாறு செயற்பட்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும். அதிக வெற்றிகளை எமது படையணியே பெற்றது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் இலங்கை வருகிறார். அவருடனான சந்திப்பின்போது எனக்கும் எனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை நீக்குமாறு அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. இது விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு முன்பிருந்தே ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆளுந்தரப்பு இதுவிடயத்தில் அதிக கவனம் செலுத்திவருகின்றது. பயணத்தடை நீக்கப்படாவிட்டால் அது எனக்கும், எனது குடும்பத்துக்கு மட்டுமே பிரச்சினையாக அமையும். நாட்டுக்காக சேவையாற்றியதற்காக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அது எனக்கு பெரிய பிரச்சினையாக அமையப்போவதும் இல்லை என்றார். (ம-44)



# மாவட்டச் செயலகமா? கட்சி அலுவலகமா?

## நடைமுறையை மீறிய அளவில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகை பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் தெரிவு செய்யப்பட்டோருக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட இணைத் தலைவர்களுள் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இடம்பெற்ற கேட்போர் கூடத்தில் மேடையில் கட்டப்பட்டிருந்த பதாகை சர்;ச்சையை தோற்றுவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் அங்கஜன் இராமநாதனால் வெளியிடப்பட்ட 'என் கனவு யாழ்' என்ற அடிக்குறிப்புடன் காட்சிப்படுத்தப்பட்ட பதாகையில், ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அவர்களது சகோதரர் பஸில் ராஜபக்ச ஆகியோரின் படம் சிறியதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் படம் பெரிதாகவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

பொதுவாக ஜனாதிபதியின் படம் பெரிதாகவும், பிரதமரின் படம் அதற்கு அடுத்த அளவிலும், துறைசார் அமைச்சரின் படம் அதனை விட சின்னதாகவும், நாடாளுமன்ற உறுப்பினரின் படம் இவையெல்லாவற்றையும் விட சின்னதாகவுமே காட்சிப்படுத்தப்படுவது வழமை. ஆனால் வழமைக்குமாறான இவ்வாறானதொரு பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

'இந்தப் பதாகையை நாம் வைக்கவில்லை. அவர்கள்தான் எல்லாவற்றையும் செய்தார்கள்' என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார். (ஒ.ப.5)

# போதையில் சாரத்தியம் ரூ. 1,50,000 தண்டம்

சாவகச்சேரி, ஒக்.28
போக்குவரத்து விதிமுறைகளை மீறி, மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஐவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்குகள் நேற்றுத் தனித் தனியாக சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில், சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாது வாகனம் செலுத்திய ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்குத் தலா 25ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டன. (எ-9)

# கொரோனாவின் அபாயத்தையடுத்து மேலும் சில பகுதிகளுக்கு ஊரடங்கு!

கொழும்பு, ஒக்.28
மொரட்டுவை, ஹோமாகம, பாணந்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு நேற்றிரவு 9 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக ஏற்கனவே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக இரு நாள்கள் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும், கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் மருந்தகங்கள் மற்றும் கடைகள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைத் தவறாமல் பின்பற்றி தமது கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

சுகாதார விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். (எ-22)

# அபாய வலயங்கள் எவையும் கிளி. மாவட்டத்தில் இல்லை!

## சுகாதாரத் தரப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.28
கிளிநொச்சி, கண்டாவளை அபாய வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்களில் உண்மை இல்லை என்று கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் சமூகத் தொற்று எதுவும் ஏற்படவில்லை. தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொற்றாளர்கள் இனங்காணப்படவில்லை. அவர்களுக்கு இரண்டாவது தடவையாகவும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்படும்.

எனினும் மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து எவரேனும் வந்தால் உடனடியாக சுகாதாரத் தரப்பினருக்கு அல்லது கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

# மினுவாங்கொட தொற்று விசாரிக்குமாறு பணிப்பு

கொழும்பு, ஒக்.28
மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் எவ்வாறு கொரோனா தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் விசாரணை செய்து இருவாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தொற்று ஏற்படுவதற்கு நிறுவனத்தின் நிர்வாகிகள், அதிகாரிகளின் கவனயீனம், பாதுகாப்பற்ற செயற்பாடு அல்லது அரச அதிகாரிகளின் கவனயீனம் எந்த அடிப்படையிலேனும் காரணமாக அமைந்துள்ளதா என்பதை ஆராயுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

தண்டனைச்சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றங்கள் அல்லது தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்துக்கிணங்க குற்றமிழைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளுக்காக அனுபவம் வாய்ந்த மூத்த அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று சட்ட மா அதிபர் உத்தரவிட்டுள்ளார். (எ-இ)

# அமெரிக்க படைமுகாமுக்கு இலங்கையில் இடமில்லை!

## கொழும்பை வொஷிங்டன் பகைக்காது என்று இலங்கை அரசு நம்பிக்கை

**கொழும்பு, ஒக். 28**

**இலங்கையில் அமெரிக்காவின் படைமுகாம் அமைவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் அதற்கான எந்தவொரு உடன்படிக்கையிலும் அரசு கைச்சாத்திடாது எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கையில் அமெரிக்காவின் இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கான நோக்கிலேயே இராஜாங்க செயலாளர் இங்குவருகிறார் என முன்னதாக நீங்கள் அறிவிப்பு விடுத்திருந்தீர்கள் அந்த நிலைப்பாட்டிலா இன்றும் இருக்கின்றீர்கள் என எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் உதயகம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கடந்த அரசு 'சோபா' உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தது. அதற்கு நாம் உள்ளிட்ட பல தரப்புகள் எதிர்ப்பை வெளியிட்டதால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. எமது அரசாங்கம் சோபா உடன்படிக்கையிலோ அல்லது எம்.சி.சி ஒப்பந்தத்திலோ கைச்சாத்திடாது, எனவே, அவ்வாறானதொரு அச்சுறுத்தல் இல்லை.

கை தட்டுவதற்கு இரு கரங்கள் அவசியம். ஆக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு இரு நாடுகளின் இணக்கப்பாடும் அவசியம், அவ்வாறானதொரு தேவை அமெரிக்காவுக்கு இருந்தாலும், இலங்கைக்கு இல்லை.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் இலங்கை பயணத்தின்போது கூட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படமாட்டாது. கடந்த ஆட்சியின்போது நாட்டுக்கு அச்சுறுத்தல் இருந்தது. இதனை உணர்ந்ததாலேயே மக்கள் எமது அரசுக்கு ஆணை வழங்கினர். அதன்பிரகாரமே நாம் செயற்படுவோம்.

இலங்கையானது அனைத்து நாடுகளுக்கும் முக்கியத்துவமிக்கதாகும். எனவே, இலங்கையுடன் நட்புறவின் அடிப்படையிலேயே அமெரிக்கா செயற்படும் என நம்புகின்றோம். இலங்கையுடன் மோதல் போக்கை கடைப்பிடித்தால் அது உபகமாக்கமாக அந்நாட்டுக்கே நஷ்டம் என ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன' என்றார். (ம-44)

# கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண்பதற்கு புதியமுறை!

கொழும்பு, ஒக். 28

கொரோனா நோயாளர்களை கண்டறிவதற்கு சுகாதாரத் துறையினர் இன்னுமொரு முறையை அறிமுகப்படுத்தவுள்ளனர். நோயாளர்களைகண்டறிவதற்கு றெபிட் எண்டிஜன் டெஸ்ட் என்ற விரைவான பிறபொருள் எதிரியாக்கி பரிசோதனை முறைமையை மேற்கொள்வது தொடர்பில் சுகாதாரத் துறையினர் அவதானம் செலுத்தியுள்ளனர்.

எதிர்காலத்தில் பி.சி.ஆர் பரிசோதனையை மாத்திரம் மேற்கொண்டு நோயாளர்களை கண்டறிவதில் மட்டுப்பாடான நிலைமை இருப்பதனால், இந்தப் பரிசோதனை முறைமையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இம்முறை மூலம், 15 அல்லது 20 நிமிடங்களில் முடிவுகளை விரைவாக அறியமுடியுமெனவும் இதனால் தொற்றுப் பரவல் தொடர்பாக இலகுவாக அறியமுடியுமெனவும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர். (ம-இ)

# நெடுந்தூர பஸ்களுக்கு கொழும்புக்குள் நுழையத் தடை

கொழும்பு, ஒக். 28

கொழும்புக்குள் வரும் தூரப் பகுதி பஸ் சேவைகளை நேற்று முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று கொழும்பிலும் மற்றுமொரு சமூகத்தொற்றாக உருவெடுக்கலாம் என்று அச்சம் நிலவுகின்றது. இந்த நிலையிலேயே கொழும்புக்குள் வரும் தூரப்பகுதி பஸ் சேவைகளை நேற்று முதல் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த நாட்டை முடக்கப்போவதில்லை

கொழும்பு, ஒக். 28

கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்ததுடன், ஜனாதிபதி இது குறித்து அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழமையான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்வதற்கு அனுமதிப்பது எனவும் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

கடந்த முறையை விட இம்முறை கொரோனா வைரஸ் பரவல் வேகமாகப் பரவுகின்றது எனவும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் அனைவரும் சுகாதார அதிகாரிகளினால் முன்மொழியப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்த தீர்வு எனவும் அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது. (ம-இ)

# பேலியகொட கொத்தணியில் 49 தொற்றாளர்கள்

கொழும்பு, ஒக். 28

பேலியகொட மீன் சந்தையுடன் சம்பந்தப்பட்ட கொரோனாக் கொத்தணி இணைப்பாளர்கள் எனக் கருதப்படும் நபர்களிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்புகளைப் பேணிய இடங்களும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. (ம-இ)

# அதிக ஆபத்துப் பகுதியாக 27 சுகாதாரப் பிரிவுகள்!

கொழும்பு, ஒக். 28

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு, 27 பொது சுகாதார ஆய்வாளர்கள் பிரிவுகளைநாட்டில்கொரோனா அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் ஏழு பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் 19 பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் இரண்டு பிரிவுகளும் அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு நகரசபை பகுதிகள், நுகேகொட, பத்தரமுல்ல, கொலன்னாவ, கஹாதுடுவ, மொரட்டுவ மற்றும் கடுவெல ஆகியவை அதிக ஆபத்து நிறைந்த பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன. (ம-இ)

# கொரோனா ஆபத்து நிலைமையில் மாடு பிடிக்கும் கூட்டம் தேவையா?

## வேலணை பொது அமைப்புகள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.28

தற்போது கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தான கட்டத்தில் உள்ள போது, வேலணைப் பிரதேச செயலரால் மாடுகளைப் பிடிப்பது தொடர்பான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இப்போது அவசியம்தானா? என்று பொது அமைப்புகள் விசனம் தெரிவித்துள்ளன.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஒன்றுகூடல்களை, கூட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். நிறுவனங்கள், திணைக்களங்களில் அநாவசிய கூட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று அரசும் அறிவுறுத்தியுள்ளது.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் புங்குடுதீவில் இணங்காணப்பட்டதை அடுத்துத் தீவகப் பகுதி கடும் சுகாதார கண்காணிப்பில் உள்ளது. மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வேலணைப் பிரதேச செயலரால் மாடுகள் பிடிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று பிரதேச செயலகத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொது அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், ஆலய நிர்வாகங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் இந்தக் கூட்டம் அவசியம்தானா என்று பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

வேலணைப் பிரதேசத்தில் இருந்து பிடிக்கப்படும் மாடுகள் வெளியிடங்களைச் சேர்ந்தோருக்கு விற்கப்பட்டு, அவை அவர்களால் இறைச்சியாக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த அவசர கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்து கொள்ளவுள்ளார் என்று அதிகாரிகள் மட்டத்தில் பேசப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொள்ளாது பொறுப்பில்லாது அதிகாரிகள் நடந்து கொள்கின்றனர் என்று பொது அமைப்புக்களும், விவசாய அமைப்புக்களும் விசனம் தெரிவித்துள்ளன.

# வெளிவிவகார கொள்கையிலிருந்து விலகினால் இலங்கைக்கு தோல்வியே

*வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறுகிறார்*

**கொழும்பு, ஒக்.28**

**இலங்கை நடுநிலையான வெளிவிவகார கொள்கையிலிருந்து விலக முற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தோல்வியைச் சந்தித்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**



அமெரிக்கா, இந்தியா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் வலுவான நாடுகளின் செல்வாக்கின் மையத்தில் இலங்கை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல தரப்பினர் தற்போது இலங்கையை மோதல் களமாக மாற்ற விரும்புகின்றனர். அதனை நாங்கள் தவிர்க்க வேண்டும். இலங்கை ஓர் அணிசேரா நாடாகவும் பக்கச் சார்பற்ற நாடாகவும் ஆதிக்கம் செலுத்துவதற்கான விளையாட்டிலிருந்து விலகியிருக்க வேண்டும். வெளிவிவகார கொள்கையிலிருந்து இலங்கை விலகிய ஒவ்வொரு தருணமும், தோல்வி அடைந்தமை மட்டுமன்றி அதன் முன்னேற்றம் குறைவடைந்து உள்நாட்டு மோதல்களிலும் சிக்குண்டது. ஒரு நாட்டுக்கு பதில் இன்னொரு நாட்டை தெரிவுசெய்யும்நிலையில், இலங்கை இல்லை-என்றார். (ர-இ)

# 1000 கி.கிராம் மஞ்சள் நடுக்கடலில் மீட்பு

கொழும்பு, ஒக்.28

இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்ற ஆயிரம் கிலோ அடங்கிய 40 மஞ்சள் மூடைகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடியிலிருந்து பாம்பன் கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம் கடத்த முயன்ற மஞ்சள் மூடைகளே இவ்வாறு நடுக்கடலில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

பாம்பன் பாலம் கடல் வழியாக வெளிமாவட்ட படகு ஒன்றில் இலங்கைக்கு கடத்தல் பொருள்கள் அனுப்பப்படவுள்ளன என மெரைன் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்தே இந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டுள்ளன. பாம்பன் லைட் ஹவுஸ் அருகே நடுக்கடலில் உரிய பதிவு எண் இல்லாத நாட்டுப் படகு ஒன்று நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. இதனைக் கண்ட மெரைன் பொலிஸார் படகைச் சோதனை செய்தனர். அந்தப் படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக மஞ்சள் மூடைகள் படகில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கடத்தல்காரர்களை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர் என்றும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் மெரைன் பொலிஸ் ஆய்வாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார். (ர-இ)

# 22 பொலிஸாருக்கு பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, ஒக்.28

நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த 22 பொலிஸ் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்வது குறித்து சுகாதார அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என சார்ஜென்ட்அட்ஆர்ம்ஸ் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீ ஜெயவர்தனபுர நாடாளுமன்ற வளாகத்தை மூடிவிட்டு தொற்று நீக்கம் செய்யத் தீர்மானித்துள்ளனர். தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர், நாடாளுமன்றம் இன்று தனது பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-இ)

# வீடுகளுக்கே மருந்துகள்: 2ஆம் கட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.28



ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில், அரசாங்க வைத்தியசாலை கிளினிக்குகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு அவர்களது வீடுகளுக்கே மருந்துகளை விநியோகிக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளின் ஊடாகச் சிகிச்சைபெறும் நோயாளர்களுக்கு தபால் ஊடாக மருந்துகளை வழங்கும் இரண்டாவது கட்ட நடவடிக்கையே இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களின் வெளிநோயாளர்களுக்கு, இன்று முதல் மருந்துகள் தபால் மூலமாக வீடுகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. நோயாளர்களின் மருந்தகப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ள முகவரிக்கு மருந்துகள் விநியோகிக்கப்படவுள்ளன.

எனினும் நோயாளிகளின் முகவரிகளில் மாற்றங்கள் இருப்பின் வைத்தியசாலைக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு மாற்றிக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-இ)

# இரட்டைக் குடியுரிமை விவகாரம் ஜனாதிபதிக்கு ஆத்திரமூட்டியது!

*அரச தரப்பு எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.28

இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் அரசியலில் ஈடுபட அனுமதிக்கும் அரசமைப்பு விதிகளை மீளப்பெற வேண்டும் என்ற கோரிக்கை, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை ஆத்திர மூட்டியது என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களில், நாட்டை நேசிக்கும் மற்றும் நாட்டுக்காக சேவையாற்ற விரும்புவோரும் உள்ளனர் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார். 20 ஆவது திருத் தத்தில் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விதிகள் சமீபத்தில் நாடாளுமன்ற வாக்கெடுப்பைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையை கைவிட்ட போது அவர் சந்தித்த அசௌகரியங்களைச் சுட்டிக்காட்டினார் எனவும் வீரசுமன வீரசிங்க மேலும் குறிப்பிட் டார். (ர-இ)

# அருங்காட்சியகங்கள் அனைத்துக்கும் பூட்டு

கொழும்பு,ஒக்.28

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அருங்காட்சியகங்களும் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை, சிகிரியா, கதிர்காமம், காலி மற்றும் கண்டி உள்ளிட்ட மத்திய கலாசார நிதித்திட்டத்துக்குக் கீழ் பராமரிக்கப்படும், அனைத்து அருங்காட்சியகங்களும் இவ்வாறு மறு அறிவித்தல் வரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-இ)

# மட்டு. மதத்தலங்களில் வழிபாடுகள் நிறுத்தம்

மட்டக்களப்பு, ஒக்.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முதல் எதிர்வரும் ஒரு வாரத்துக்கு சகல மதத்தலங்களில் மக்கள் ஒன்றுகூடும் வழிபாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும், சிகை அலங்கார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன என்றும் மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன் தெரிவித்தார்.

அனைத்துவிதமான வர்த்தக நிலையங்களிலும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும் எனவும், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் 16 கொரோனாத் தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களுடன் தொடர்புடைய 500 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதையடுத்து இந்தத் தீர்மானங்களை எடுத்துள்ளனர். (ர-இ)

# புதிய வைத்தியசாலைகள் கம்பஹாவில் நிர்மாணம்

கொழும்பு, ஒக்.28

வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்று நோயாளர்களுக்காக சிகிச்சை அளிக்க கம்பஹா மாவட்டத்தில் இரு புதிய வைத்தியசாலைகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என மாவட்டத்தின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மிகாரா எபா தெரிவித்துள்ளார். இதனடிப்படையில், வாதுபிட்டிவாலாவில் அமைந்துள்ள இளைஞர் மன்றம் மற்றும் கம்பஹா பொது வைத்தியசாலைக்கு அருகில் புதிய வைத்தியசாலைகளை நிர்மா ணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைகளின் கட்டுமானப் பணிகள் இலங்கை இராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் என்றும், கட்டுமானத்தை விரைவில் முடிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார். (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## "நீங்களுமா மனோ?"

பேரரசர் யூலியஸ் சீசரைக் கொல்ல அவரது சகாக்களே சதி செய்தார்கள். மூடிய அரண்மனைக்குள் அவர்மீது கத்திகள் பாய்ந்தன. சீசர் வலியால் துடிக்கும்போது, அவர் முதுகில் ஆழமாய் இன்னொரு கத்தி இறங்கியது. வலியோடு திரும்பிப் பார்த்த சீசருக்கு பேரதிர்ச்சி. யாரைத் தன்னுடைய உயிர் நண்பனென இதுவரை சீசர் நம்பிக் கொண்டிருந்தாரோ, அந்த புருட்டஸ் தான் அப்படிக் குத்தியவன். புருட்டஸின் நம்பிக்கைத் துரோகத்தை சீசரால் ஜீரணிக்க முடியவில்லை. வியப்பும், ஏமாற்றமும்,வலியும் சுமந்த சொற்களில் இறுதியாக யூலிய சொன்ன வார்த்தை " புருட்டஸ் நீயுமா?" என்பதே.

இப்போது அதே வார்த்தைகளை " மனோ கணேசன் நீங்களுமா?" என்று கேட்குமளவுக்கு, தமிழ் மக்கள் நினைத்தே பார்த்திராத துரோகமொன்று நிகழ்ந்திருக்கிறது. மனோ கணேசன் இதுவரைக்கும் தமிழ்த் தேசியத்தின் தென்னிலங்கைப் பிரதிநிதியாகவே அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். முன்னைய மஹிந்த யுகத்தில் கூட, தன் தம்பியே ஆளும் கட்சியோடு ஓடிப்போய் கூட்டுச் சேர்ந்தபோதும், தன் கொள்கையில் தளராது நின்றவர். தமிழர்களுக்கு எதிராக எங்கு அநியாயம் நடந்தாலும், பொங்கி எழுந்து நியாயம் கேட்பதிலும் மனோவுக்கு நிகர் மனோ தான். அதனால் தான், அவருடைய பிரதிநிதித்துவம் பறிபோகக்கூடாது என்னும் நல்லெண்ணத்தோடே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை கொழும்பில் போட்டியிடும் முடிவை கைவிட்டிருந்தது. இல்லாவிட்டால், கூட்டமைப்பு வாக்குகளைப் பிரித்திருந்தால், தோல்வியடைந்த அரசியல்வாதிகள் பட்டியலுக்குள் மனோ கணேசனும் இணைந்திருப்பார்.

தமிழர்களின் குரலாக எப்போதும் ஒலிப்பார் என்ற நம்பிக்கையில் எடுக்கப்பட்ட இந்த முடிவு தவறானதோ என எண்ண வைத்துவிட்டார் மனோ கணேசன். ஏராளமான தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித காரணங்களோ, விசாரணைகளோ இன்றி பல வருடங்களாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை விடுவிக்க எடுத்த முயற்சிகளெல்லாம் வீணானது தான் மிச்சம். அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அரசு கண்களை இறுக மூடிவிட்டது. இந்த நிலையில் போதைப்பொருள் கடத்தல், ஆள் கடத்தல், கொலை என்று எல்லாவகையான சட்டவிரோதச் செயல்களிலும் முன்னணியில் இருந்த துமிந்த சில்வாவை விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு எம்.பிக்கள் அனுப்பிய மகஜரில் மனோ கணேசனும் கையொப்பம் இட்டு, வரலாற்றுத் துரோகம் ஒன்றை இழைத்துள்ளார்.


துமிந்தவை விடுவிக்குமாறு தான் கையொப்பம் இட்டமைக்கு அவர் சொல்லும் காரணம் இன்னும் புதுமையானது. " அவர் போதையில் அறியாமல் கொலை செய்துவிட்டார். பல வருடங்கள் சிறையிலும் இருந்துவிட்டார். அவர் திருந்த ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போமே" என்பதே மனோவின் நியாயம். ஆனால், எந்தக் குற்றமும் செய்யாமல், இருபது வருடங்களுக்கும் மேலாகக்கூட சில அரசியல் கைதிகள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களை விடுவிக்க இப்படி ஒரு கையெழுத்து வேட்டையை மனோ கணேசன் ஆளும் கட்சி எம்.பிக்களின் துணையோடு செய்வாரா? அப்படிச் செய்து, அவர்களை விடுவித்தால் இப்படி துமிந்தவுக்காக கையெழுத்துப் போட்ட பாவத்தைக் கழுவ முடியும். ஆனால் அவ்வாறில்லாமல் தானும் ஒரு சராசரி அரசியல்வாதியாகி, கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, சுயநலங்களுக்காகவும் பதவிக்காகவும் துமிந்த போன்ற கொலைக்குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்குவாரானால், இனிமேல் மனோ கணேசன் மக்களின் வாக்குகளை மறக்க வேண்டியதுதான்.

சுன்னாகம் கழிவு ஒயில் விவகாரம்;

# இழப்பீட்டைப் பெறுவதற்கு பாதிக்கப்பட்டோர் சம்மதம்

யாழ்ப்பாணம், ஒக்.28

**யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் உள்ள நொதேர்ன் பவர் நிறுவனத்தினுடைய கழிவு ஒயில், அங்குள்ள மக்களின் குடிதண்ணீர் கிணறுகளில் கலந்ததால், ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய, இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு, பாதிக்கப்பட்ட மக்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.**



சுன்னாகம் கழிவு ஒயில் விவகாரம் தொடர்பில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 கோடி ரூபா இழப்பீடு வழங்குமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த இழப்பீடு வழங்குவது தொடர்பில், பாதிக்கப்பட்ட மக்களுக்கும், தொடர்புபட்ட திணைக்களங்களுக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. என்ன அடிப்படையில் அந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளது. என்ன வழிமுறையில் வழங்கப்படவுள்ளது. எதற்காக இழப்பீடு வழங்கப்படுகிறது போன்ற விடயங்கள் அங்கு கலந்துரையாடப்பட்டன. இதன் போது மக்கள் தங்களுடைய சந்தேகங்கள், கேள்விகளை அதிகாரிகளிடத்தில் வெளிப்படுத்தினர். அவர்களுக்கான பதில்களும் வழங்கப்பட்டிருந்தன. முடிவில் இழப்பீட்டைப் பெறுவதற்கு சம்மதிப்பதாகவும், பாதிக்கப்பட்ட ஏனையவர்களுடைய வங்கிக் கணக்கு இலக்கங்களை தாமே பெற்றுத் தருவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ப)

## ஆள்கள் இல்லாத காணியை அபகரிக்க ஒரு குழு முயற்சி?

*அவதானமாக இருக்குமாறு யாழ். மாவட்டச் செயலர் பணிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணத்தில், ஆள்கள் இல்லாது, பயன்பாடுகள் அற்று இருக்கும் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் ஒரு குழு ஈடுபட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

அபிவிருத்தி, மற்றும் வாழ்வாதாரத்துக்கு பிரதேச வளங்களைப் பயன்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் உள்ள வளங்களை அடையாளப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், ஆள்கள் இல்லாது, பயன்பாடுகள் அற்று இருக்கும் காணிகளை அபகரிக்கும் முயற்சியில் ஒரு குழு ஈடுபட்டுள்ளது. அந்தக் காணிகளுக்கு ஊடக நிறுவனம் ஒன்றின் பெயரில் உறுதி தயாரிக்கப்பட்டு, அபகரிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று நான் அறிகின்றேன். எனவே பிரதேச செயலர்கள் அது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## யாழில் அடையாளப்படுத்தப்படும் அரச மற்றும் தனியார் காணிகள்

*கச்சேரியில் நேற்று கலந்தாய்வு*

யாழ்ப்பாணம், ஒக்.28

அபிவிருத்தி, மற்றும் வாழ்வாதாரத்துக்கு பிரதேச வளங்களைப் பயன்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் உள்ள வளங்களை அடையாளப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாண மாவட்டப் பிரதேச செயலர்கள், மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படாதுள்ள, மற்றும், வாழ்வாதாரத்தை அதிகரிக்கக் கூடிய அரச, மற்றும் தனியார் காணிகளின் விவரங்கள் தொடர்பில் பிரதேச செயலர்களிடம் அறிக்கை கோரப்பட்டது. அந்தக் காணிகளில் என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பிலும், கலந்துரையாடப்பட்டது.

காணிகளை அடையாளம் காணுவதில் உள்ள தடைகளை இனங்கண்டு, அந்தத் தடைகளை நீக்கி, அந்தக் காணிகளுடைய விவரங்களை இன்று மாலைக்குள் வழங்கவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பிரதேச செயலர்களிடம் கேட்டுக்கொண்டார். பிரதேச செயலர்களால் வழங்கப்படும் தகவல்களுக்கு அமைய அந்தக் காணிகளை அடையாளப்படுத்தி, அவை என்ன தேவைக்குரியவை என்பது, வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு குருநகர் நிலவரம் தெரியாதாம்!

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுத் தொடர்பான நிலவரம் தனக்கு தெரியாது என்றும், பொதுச் சுகாதாரப் பரிசோதரிடமே கேட்கவேண்டும் என்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடைய நிலவரம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று மாவட்டச் செயலரிடம் நேரில் சென்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"குருநகரில் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புபட்ட மேலதிக தகவல்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமே கேட்கவேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

எனினும் குருநகரில் நேற்றுமுன்தினம் இருவர் தொற்றாளர்கள் என இனங்காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# நெசவுத் தொழிலாளரின் சம்பளம் அதிகரிக்கும்?

## கிளிநொச்சியில் ஜீவன் தொண்டமான் உறுதி

**கிளிநொச்சி, ஒக்.28**

**நெசவுத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க உரிய தரப்புடன் பேசுவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.**

கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் வந்த அவர், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள ஆறுமுகன் தொண்டமானால் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நெசவு நிலையத்தைப் பார்வையிட்டு, அதன் தேவைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது, அந்த நெசவு நிலையத்தில், நெசவு, நூல் நெய்யும் மோட்டர்களின் தேவை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. அத்தோடு, ஊழியர்களுக்கு தற்போது 300 ரூபாவே ஊதியமாகக் கிடைக்கிறது என்றும், அதனை அதிகரித்துத் தருமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்; நெசவு நிலையத்துக்குத் தேவையான பொருள்களை ஒரு வாரத்துக்குள் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், நெசவு சம்பந்தமாக ஏதேனும் தேவை ஏற்படின் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவித்தார்.

(ஐ-113)

# தவசிகுளம் பகுதியில் டெங்குப் சோதனை



சாவகச்சேரி,ஒக்.28

கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பிரிவில் மீண்டும் டெங்குப் பரிசோதனைகள் அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளன என்று சுகாதார பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலரின் ஏற்பாட்டில் குறித்த பகுதியில் டெங்கு பரிசோதனைகள் நேற்று நடத்தப்பட்டன.


இதன்போது அந்தப் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் காணப்பட்டதால் மீண்டும் டெங்குப் பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

143 இடங்களில் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 71 இடங்களில் நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நீர் ஏந்து பொருள்கள் காணப்பட்டுள்ளன.

அவற்றில் பத்து இடங்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டுள்ளன.

அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய 61 இடங்களில் காணப்பட்ட நீர் ஏந்துபொருள்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

இருப்பினும் 13 இடங்களின் உரிமையாளர்களுக்கு மூன்று நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டு இக்காலப்பகுதிக்குள் நீர் ஏந்து பொருள்கள் அப்புறப்படுத்தி துப்புரவு செய்யுமாறும் அறிவித்துள்ளனர். (ஐ-9)



நியூ யாழ் பாம், யாழ் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக புலோலி சலஞ்சஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. (ஐ-422)

# சாவகச்சேரி பஸ் நிலையத்தில் விளம்பரத்தட்டிகள் அகற்றல்;

## மழையில் நனையும் மக்கள்

சாவகச்சேரி,ஒக்.28

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரத் தட்டிகள் அண்மையில் அகற்றப்பட்டமையால் பஸ் நிலையத்தினுள் நிற்கும் பயணிகள் மழை காலங்களில் நனையும் நிலை காணப்படுகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பஸ் நிலையம் அமைக்கப்பட்ட வேளையில் உயரமாக அமைக்கப்பட்டதால் மழை மற்றும் வெயில் காலங்களில் நிற்க முடியாத நிலை காணப்பட்டது. பயணிகள் கொடுத்த முறைப்பாடுகளையடுத்து கட்டண விளம்பரத்தட்டிகள் வருடாந்தம் அமைக்க. சபையால் முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து பல நிறுவனங்கள் தமது விளம்பரத்தை காட்சிப்படுத்தி வந்தன.

கடந்த வருடம். வழங்கப்பட்ட விளம்பரத்தட்டிக்கான குத்தகைக் காலம் முடிவடைந்ததில் அவை அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் அங்கு காணப்படும் இடைவெளிகள் ஊடாக மழைத் துளிகள், பஸ் நிலையத்துக்குள் வீழ்கின்றமையால் அங்கு நிற்போர் நனைய வேண்டியுள்ளது.

இது தொடர்பாக நகர சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது விளம்பரத்தட்டி பொருத்துவது தொடர்பாக விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட்டு பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# பொதுமக்கள் சேவை தொடர்ந்தும் இயங்கும்

கொழும்பு, ஒக்.28

கொவிட் அச்சுறுத்தல் நிலைமை காணப்பட்டாலும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் பொது மக்கள் சேவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

கொவிட் தொற்றால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் சிந்தித்து தொலைபேசி, தபால் மற்றும் இணைய வழி மூலமாக பொது மக்களுக்கு சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜனாதிபதி செயலகத்தின் பொது மக்கள் சேவை பிரிவை 0114354550, 0112354550 ஆகிய தொலைபேசி இலங்கங்களின் மூலம் தொடர்புகொள்ள முடியும்.

0112338073 என்ற இலக்கத்தின் ஊடாக ஒம்புட்ஸ்மென் அலுவலகத்தையும், 0112354354 என்ற இலக்கத்தின் மூலம் ஜனாதிபதி நிதியத்தையும் தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

## கமநல சேவைகள் திணைக்களத்தின்

# ஆளணி வெற்றிடங்களுக்கு உறுப்பினர்களின் பிள்ளைகள்?

யாழ்ப்பாணம், ஒக்.28

கமநல சேவைகள் திணைக்களத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்களுக்கு, விவசாய உறுப்பினர்களின் படித்த பிள்ளைகளை இணைக்குமாறு, விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக கமநல சேவைகள் திணைக்களத்தில் பெரும்பாலான வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவசாய விரிவாக்க சேவையை முன்னெடுக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாய போதனாசிரியர் பதவி நீண்ட காலமாக நிரப்பப்படாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையிலேயே விவசாயத் திணைக்களத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்களுக்கு வடக்கில் உள்ள விவசாய உறுப்பினர்களின் படித்த பிள்ளைகளை உள்வாங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வெற்றிடங்களுக்கு வடக்கில் உள்ளவர்களைத் தவிர வேறு மாகாணங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படமாட்டாது என்று விவசாய அமைச்சர் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-50)

# குடும்பத்தில் ஒருவர் மட்டும் கடைகளுக்குச் செல்லுங்கள்

## வவுனியா பொலிஸார் அறிவுறுத்து

வவுனியா, ஒக்.28

குடும்பத்தில் ஒருவர் மட்டும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று பொருள் கொள்வனவில் ஈடுபட வேண்டும் என்று வவுனியா பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் செல்லும் பொது மக்கள், கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டு, குடும்பத்தில் ஒருவர் மட்டும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று தமக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் அத்துடன் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் முகக்கவசம், கையுறை என்பன அணிந்திருப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவித்த பொலிஸார், நகரில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் தங்க ஆபரணம் அணிவதையும், அதிக பணத்தைத் தம்வசம் வைத்திருப்பதையும் மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். (ஐ)

# அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.28

ஓய்வூதியர் நலன்புரிச் சங்க (வடக்கு மாகாண) நிறுவுநர் அமரர் வ.சுப்பிரமணியத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இலங்கை மின்சார சபை சுன்னாகம் கிளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர் மா.விஜயசிறி, அமரரின் படத்துக்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து அமரரின் ஞாபகார்த்தமாக ஓய்வுபெற்ற ஏ.சச்சிதானந்த ராஜாவுக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

(ஐ-இ)

# சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கையாளுங்கள்!

## கிளிநொச்சி மருத்துவமனை பணிப்பாளர் அறிவுறுத்து



**கிளிநொச்சி, ஒக். 28**

**மக்கள் சுகாதார திணைக்களத்தினரால் வழங்கப்பட்ட சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகக் கையாளவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் க. ராகுலன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாட்டில் தற்போது கொவிட்-19 இரண்டாம் அலை மிக விரைவாக பரவி வருகின்ற நிலையில் சுகாதார திணைக்களத்தினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களை கிரமமாக பின்பற்ற வேண்டும். நாட்டின் பல பிரதேசங்கள் முடக்கப்பட்டும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டும் கொரோனா நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் வழமையான சுகாதார சேவைகள் குறைக்கப்பட்டு அவசர சிகிச்சை சேவைகள் மாத்திரமே வழங்கக்கூடிய நிலை ஏற்படலாம்.

கொவிட்-19 ஆரம்பித்த காலத்தில் மக்கள் சுகாதார நடைமுறைகளை சிறப்பாக பின்பற்றியிருந்தார்கள். அதன் பயனாக கொரோனாத் தொற்று கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்ததுடன், மட்டுப்படுத்தப்படாத விரிவான சுகாதார சேவையை கிளிநொச்சி மருத்துவமனையில் இதுவரைக்கும் பெற்றிருந்தனர்.

இந்நிலை தொடரவேண்டுமாயின், சுகாதார நெறிமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல், அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்தல் போன்றவற்றை மக்கள் தமது நாளாந்த கடமைகளில் ஒன்றாக பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மக்கள், பொதுப் போக்குவரத்து, கூட்டங்கள் மற்றும் குடும்ப நிகழ்வுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு நோயாளர்கள் மாத்திரம் வருகை தரவேண்டும். இயலாதவர்கள் யாரும் வருகைதரும் போது மாத்திரம் அவருக்கு துணையாக ஒருவர் வருகைதர முடியும். தற்போதைய கொரோனாத் தொற்று நிலையை கருத்தில் கொண்டு பார்வையாளர்கள் மற்றும் உறவினர்களின் வருகை கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கிளினிக் நோயாளர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட திகதி மற்றும் குறிப்பிட்ட சரியான நேரத்திற்கு மாத்திரமே கிளினிக் சிகிச்சை நிலையத்துக்கு வரவேண்டும் - என்றார். (ஐ-6)



## பயனாளிகளுக்கு நாற்று வழங்கல்

கொடிகாமம்,ஒக் .28

சௌபாக்கியா வீட்டுத் தோட்ட வேலைத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நாற்று வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கைதடி மற்றும் மந்துவில் வடக்கு கிராம அலுவலர்கள் பிரிவுகளில் நடைபெற்றது.

கைதடியில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக தலைமையக முகாமையாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், பிரிவு கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், மாதர் சங்க தலைவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மந்துவில் வடக்கில், கிராம அலுவலர் ஐ.கானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், கமக்கார அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் மாதர் சங்க உறுப்பினர்கள் பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பயனாளிகளுக்கு தக்காளி,கத்தரி, கறிமிளகாய் மற்றும் மிளகாய் ஆகிய நாற்றுக்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## கொரோனா விழிப்புணர்வு

மன்னார், ஒக்.28

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றை அடுத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மன்னார் புதிய பஸ் நிலையத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களுக்கும் கொரோனா விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது.

மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் மன்னார் மாவட்ட போக்குவரத்துப் பொலிஸார் இணைந்து இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளனர். (ஐ-213)



யாழ்ப்பாணம் முதன்மை அஞ்சல் அலுவலகத்தில் அஞ்சல் அத்தியட்சராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் சுவர்ணசிங்கவுக்கு மாவட்ட அஞ்சல் அலுவலகங்களால் பிரிவுபசார விழா அண்மையில் அஞ்சல் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. நிகழ்வில் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், கணக்காளர் கஜேந்திரவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)




## வாழ்வாதார உதவி

மல்லாவி,ஒக்.28

விபத்தின்போது கால் பாதிக்கப்பட்டு நடக்கமுடியாத நிலையிலுள்ள கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காடு பகுதியைச் சேர்ந்த ஒருவரின் குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

மல்லாவி லயன்ஸ் கழகத்தால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்குரிய உபகரணங்களும், 20 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி1)

## கொரோனாத் தொற்று:

# மன்னாரில் 11 பேரில் இருவர் குணமடைவு

மன்னார், ஒக்.28


மன்னாரில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேரில் இரண்டு பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா நிலவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் முதல் இன்று வரை (நேற்று) 11 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மினுவாங்கொட கொரோனாத் தொற்றுகையில் தொடர்புடைய ஒன்பது பேர் மன்னார் பட்டித் தோட்டம் பகுதியிலும், பேலியகொட மீன் சந்தைத் தொகுதியில் கொரோனாத் தொற்றுகையுடன் தொடர்புடைய இருவரும் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து இன்று (நேற்று) வரை 995 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இந்த 11 தொற்று உடையவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு பேர் சிகிச்சை நிறைவு பெற்று இரணவில மருத்துவமனையில் இருந்து குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் - என்றார். (ஐ-213)



## நுழைவாயில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் நுழைவாயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிபர் தங்கவேலு செல்வகுமார் தலைமையில் திறக்கப்பட்டது.

ஜயாக்குட்டி கனகம்மா, ஜயாக்குட்டி பசுவன் ஞாபகார்த்தமாக சிவசுந்தரம் ஜெயமாலா குடும்பத்தினரால் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டது. (ஐ-422)




## காரியாலயம் திறப்பு

மன்னார், ஒக்.28

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் காரியாலயம் மாவட்டச் செயலகத்தில் நேற்று திறக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் இந்தக் காரியாலயத்தை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் விமலநாதன், மேலதிக மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், பிரதம கணக்காளர் எஸ். ஜேசு லோரன்ஸ் மற்றும் மாவட்ட பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-19)

### கொரோனா பாதிப்பு:

# தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் நிறுத்தப்படக்கூடாது

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, ஒக். 28

**கொரோனாத் தொற்றின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு தனியார்துறை ஊழியர்களுக்கு ஆகக்கூடிய சம்பளத்தை வழங்கும் முறையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரன இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தனியார்துறை ஊழியர்கள் சம்பளம் குறித்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கமைவாக ஏற்கனவே இதற்காக அமைக்கப்பட்ட செயலணியால் நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பள நடைமுறையை இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கான கோரிக்கையை தனியார் துறையினருக்கு அரசு விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில்,

கொரோனா சூழ்நிலையால் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல் தொடர்பாக தொழில் வழங்குநர்கள், தொழிற் சங்கங்கள், தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை, தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயலணி அமைக்கப்பட்டுள்ளது.

செயலணியால் 2020ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் கீழ்காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உடன்பட்டு அதற்கமைய மேற்கொள்ளப்பட்டது.

கொவிட்-19 தொற்றால் வேலை நிறுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் ஊழியர்களை தொழிலிலிருந்து நீக்காமல் இருத்தல் சமூக இடைவெளியைப் பேண வேண்டியிருப்பதால், நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களையும் பணியில் அமர்த்துவதற்கு இயலாது போவதால் ஊழியர்களை நேரசூசி அடிப்படையில் அல்லது வேறு பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி சமமாக பணிபுரியும் வகையில் பணியில் அமர்த்துதல்.

வேலை இல்லாததால் ஊழியர்கள் வீட்டில் தங்கியிருக்க நேரிடுவதால், நிறுவன ஊழியர்களுக்கு இறுதியாக செலுத்தப்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளத்தின் அடிப்படைச் சம்பளத்தின் 50வீதமும் அல்லது 14 ஆயிரத்து 500 ரூபா இரண்டிலும் மிகவும் நன்மையான தொகையைச் செலுத்தல்.

அவ்வாறு செலுத்தும் சம்பளத்திற்காக தொழில் வழங்குநரால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான செலுத்தல்களை மேற்கொள்ளல்.

தற்போது கொவிட் -19 தொற்று நாட்டில் பரவி வரும் நிலைமையில் இவ்வருடம் டிசெம்பர் மாதம் வரை மேற்குறிப்பிட்டவாறு செயற்படவும் செயலணி உடன்பாடு தெரிவித்துள்ளது.

(ஒ.இ)

## பழைமையான தபாலகங்கள் உடன் சீரமைக்கப்பட வேண்டும்

### மன்னார் கிராமிய பொருளாதார மேம்படுத்தல் கூட்டத்தில் வலியுறுத்து

மன்னார், ஒக்.28

மன்னார் மாவட்டத்தில் மிகவும் பழைமை வாய்ந்த தபாலக கட்டடங்களைச் சீரமைக்க வேண்டிய அவசியம் காணப்படுகிறது என்று மன்னார் கிராமிய பொருளாதார மேம்படுத்தல் சம்பந்தமாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான கே.மஸ்தான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் பதில் மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மன்னார் தபால் திணைக்களம் சார்பான திட்டங்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. இதன்போது;

மன்னார் பிரதான தபாலகம் இலங்கையில் முதன் முதல் 1815 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது 205 வருடங்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில் இக்கட்டடம் மிகவும் பழமையான கட்டடமாகக் காணப்படுகிறது. எனவே நவீன வசதிகள் கொண்ட தபாலகமாக அது நிர்மாணிக்கப்பட வேண்டும். அத்துடன் சிலாவத்துறை தபாலகம் 1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு தபாலகத்திற்குரிய கட்டடம் இல்லாமையால் புதிய கட்டடம் அமைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இவ்வாறு எருக்கலம்பிட்டி மற்றும் பேசாலை தபாலகங்களுக்கும் நிலையான கட்டடங்கள் இல்லாத நிலை இருந்து வருகின்றது என்று வலியுறுத்தப்பட்டது. (ஐ-60)



## கிளிநொச்சி மீன் சந்தையில் வியாபாரிகளுக்கு சோதனை

கிளிநொச்சி,ஒக்.28

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மீன் வியாபாரப் பகுதியில், 60 வியாபாரிகளிடம், பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் மாதிரிகள் பெறப்பட்டன.

பேலியகொட மீன் சந்தையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரவல் காரணமாக, யாழ்ப்பாணத்தில் இருவருக்குத் தொற்று ஏற்பட்டிருந்தது. எனவே அதனைக் கருத்தில் கொண்டு முன்னாயத்த நடவடிக்கையாக கிளிநொச்சி மீன் சந்தையிலும் 60 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

(க-214)

## நோயாளிகளுடன் தொடர்பு 412 பொலிஸார் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக். 28

கொவிட் நோயாளிகளுடன் தொடர்புகொண்ட மேல் மாகாணத்தைச் சேர்ந்த 412 பொலிஸ் உத்தியோகத்தர்களை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

57 பொலிஸ் உத்தியோகத்தர்களை தனிமைப்படுத்தல் முகாமுக்கு செல்லுமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அதிகாரிகள் ஏனையவர்களை சுயதனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தைச் சேர்ந்த பத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஒ.இ)

## கடலுணவுகளின் விலையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடலுணவுகளின் விலை நேற்று திடீரென வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

கடலுணவுகள் தெற்கே ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டதை அடுத்து சந்தைகளில் கடலுணவுகள் தாராளமாகக் காணப்பட்டன. அத்துடன் அவற்றின் விலையும் திடீரென சரிந்து காணப்பட்டது.

குருநகரில் இருவருக்கு கொரோனோத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள சில சந்தைகளில் மக்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டது. (ஐ-17)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக் 28

யாழ். பல்கலைக்கழக வெளிளிவாரிப் பரீட்சைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு நேற்றிரவு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) மூன்றாம் வருட, இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான அனுமதி அட்டைகள் வழங்கும் பணியும் இடம்பெற்றது.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பரீட்சார்த்திகள் பலர், மாவட்டங்களைக் கடந்து வர முடியாத நிலை காணப்படுகின்றமை பற்றி ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து, நிலைமைகள் சீராகும் வரை பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளருக்குத் துணைவேந்தர் அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறார்.

பரீட்சை ஒத்திவைப்பு, மறு திகதியிடல் பற்றிய விவரங்கள் பகிரங்க அறிவித்தல் மூலமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணைய வழித் தகவல்களுக்கூடாகவும் வெளியிடப்படும், இணையவழி வியாபார முகாமைத்துவமாணி கற்கை நெறிக்குரிய புதிய மாணவர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நாள்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தப்படும் என்றும், பரீட்சைகள் பற்றிய மேலதிக தகவல்களை 021 222 3612 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அந்த செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ)

# சமூகத் தொற்று இன்னும் இல்லை

## தொற்று நோயியல் நிபுணர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.28

**கொவிட் - 19 தொற்று இதுவரை சமூகத்தில் பரவவில்லை என தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதான தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற கொவிட் -19 பரவல் தொடர்பில் அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணி மிகப்பெரியது. இதனாலேயே நாடு பூராகவும் அனைத்து பிரதேசங்களிலும் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கொவிட் 19 தொற்று சமூகப் பரவலாக ஏற்பட்டிருக்குமானால் தொற்றாளர்களுக்கு இடையில் தொடர்பு இருப்பதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறான நிலை நாட்டினுள் இதுவரை பதிவாகவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், அனைத்து தொற்றாளர்களும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணியுடன் தொடர்புபட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், நாட்டினுள் சிறந்த சுகாதார அமைப்பு காணப்படுவதால் கொவிட் - 19 நிலைமைக்கு முகம்கொடுக்க மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய இயலுமை உள்ளது. தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்விதத்திலும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## தனிமைப்படுத்தலில் 35,000 பேர்

கொழும்பு, ஒக்.28

நாடளாவிய ரீதியில் 35,000 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

மேலும் கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து இதுவரை 185,000 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். கொரோனா வைரஸ் பரவலைத் தவிர்ப்பதற்காக, தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் கண்காணிக்கப்பட்டும் வருகிறது. சம்பந்தப்பட்ட இடங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள் விசேட அறிவித்தல்களை ஒட்டுவதன்மூலம் இதனைக் கண்காணித்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.28

டாம் வீதி பொலிஸ் நிலையத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை நடத்துநர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸ் நிலையத்தில் சேவை புரியும் 12 அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தற்போது டாம் வீதி பொலிஸ் நிலையம் முடக்கப்பட்டுள்ளதுடன், தொற்று நீக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## ஊரடங்கு மீறல்: கைது 46



கொழும்பு, ஒக்.28

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேர காலப் பகுதிக்குள் 46 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தக் காலப் பகுதியில் 7 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ந-இ)

## தனிமைப்படுத்தப்பட்டது ஹற்றன் நகரம்




ஹற்றன், ஒக்.28

ஹற்றன் நகரம் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக மாற்றப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி, மீள் அறிவித்தல் வரையில் இது நடைமுறையில் இருக்கும் எனவும், கொரோனா தொற்றுநோயைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ந-இ)

## ஹற்றனில் மேலும் 10 பேருக்கு கொரோனா

நுவரெலியா, ஒக்.28

ஹற்றன் பகுதியில் மேலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஹற்றன் டிக்கோயா நகரசபைத் தலைவர் ச.பாலச் நந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஹற்றன் மீன் விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவரோடு தொடர்புடைய 23 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.இதில், இந்த நபரின் குடும்பத்தினர் நால்வர் உட்பட மேலும் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து ஹற்றன் நகரை முழுமையாக மூடி, கிருமித் தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-இ)

## கடலோர பாதை ரயில்களுக்கு நேர அட்டவணை

கொழும்பு, ஒக்.28

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ள பகுதிகளில் கடலோர பாதையில் இயங்கும் ரயில்களுக்கான நேர அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலி, அளுத்கம, களுத்துறை வடக்கு, பாணந்துறை மற்றும் பெலியட்ட ஆகிய இடங்களிலிருந்து பல ரயில்கள் இயக்கப்படும்.

அந்தப் பயணம் கொள்ளுப்பிட்டியுடன் நிறைவடையும்.இந்த ரயில் சேவைகள் காலையிலும் மாலையிலும் முன்னெடுக்கப்படும். களனி பள்ளத்தாக்கு பாதையில் ரயில்கள் நாரஹேன்பிட்டி வரை இயக்கப்படும் என்றும் புத்தளம் ரயில் சேவை வைக்கால் வரை இயக்கப்படும் என்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் கூறியுள்ளது. (ந-இ)

## துறைமுகங்களில் தேங்கியுள்ள மீன்கள் விநியோகத்தில் சிறப்பு நடவடிக்கைகள்



கொழும்பு, ஒக்.28

மீன்பிடி துறைமுகங்களில் தற்போது சேகரித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை உரிய மீன் சந்தைகளுக்கு அல்லது பல பகுதிகளுக்கு விநியோகம் செய்தல் தொடர்பிலும் குறித்த மீன்களை உரிய சந்தைகளுக்கு கிடைக்கச் செய்வதற்கான சிறப்பு சுகாதார வழிமுறைகளை உள்ளடக்கியும் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல பகுதிகளிலும் மீன்பிடித் துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன. அத்துடன் சில பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்துவது தொடர்பில் இன்னும் எந்த முடிவுகளும் எடுக்கப்படாதுள்ள காரணத்தால் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை சந்தைகளுக்கு விநியோகிப்பதற்காக இந்த சிறப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது பூரண சுகாதார நடைமுறைகள் குறித்து சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ள நிலையில் விரைவில் உள்ளூர் சந்தைகளில் மீன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## உடல் சூட்டை அளக்க இராணுவப் படையணி

கொழும்பு, ஒக்.28

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, இராணுவத்தின் விசேட மோட்டார் சைக்கிள் படையணி குழுவினர் கொழும்பு நகர எல்லைக்குள் மக்களின் உடல் வெப்பநிலையை அளவிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இத் தகவலை கொவிட்-19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இந்த இராணுவ விசேட மோட்டார் சைக்கிள் படையின் 2 குழுக்கள் கொழும்பு மாநகர எல்லைக்குள்ளும் ஏனைய 3 குழுக்கள் கிராண்ட் பாஸ் பிரதேசத்திலும் இவ்வாறு உடல் வெப்பநிலையை பரிசோதிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# தொற்றாளர்களை என்ன செய்வது?

## ஆராய்கின்றனர் மருத்துவர்கள்

**கொழும்பு,ஒக்.28**

**கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படும் அனைவரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட வேண்டுமா? அதேபோன்று அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டியவர்களா? என்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன.**

வைரஸ் பரவலைக் கருத்தில் கொண்டு இந்த விடயங்கள் ஆராயப்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், மருத்துவமனைகளில் இடவசதி இல்லை.

அதேபோன்று தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள இட வசதியும் போதாது.

அதற்கமைய மருத்துவமனைகளில் அனுமதித்தல் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப வேண்டியவர்களைப் பிரித்து தெரிவு செய்வதற்கு அவசியமான முறை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

நாட்டில் உள்ள வளங்களுக்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

## இந்திய மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

இராமேஸ்வரம்,ஒக்.28

தமிழகம் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நேற்றுக் காலை சுமார் 400 க்கும் குறைவான விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி ஆதம்பாலம் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அந்தப் பகுதியில், ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களை விரட்டியடித்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் நேற்று அதிகாலை மீன் பிடித்து விட்டு கரை திரும்பிய நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீது, கற்கள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (கு-இ)

## ஆபத்தான பகுதிகளை அறிய 'மொபைல் அப்ஸ்'



கொழும்பு,ஒக்.28

கொரோனா வைரஸ் அதிக ஆபத்துள்ள பகுதிகளின் பயனர்களை எச்சரிக்க, மொபைல் அடிப்படையிலான அப்ஸ் உருவாக்கப்படவுள்ளது.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அப்ஸில் பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதிக ஆபத்துள்ள பகுதிகள் தொடர்பான பயனர்களை எச்சரிக்க இது உதவும்.

இந்த அப்ஸ் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில், அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மினுவாங்கொடா கொரோனா வைரஸ் கொத்தணியுடன் இணைப்பில் இருந்த நபர்களின் தொடர்புகளைக் கண்டறிவதில் அதிகாரிகள் சிரமங்களை எதிர்கொண்டனர். இந்த நிலையில், தொடர்பு தடமறிதலுக்காக மொபைல் அப்ஸ் உருவாக்கும் யோசனை விவாதிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

## மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.28

பொதுப்போக்குவரத்துக்களில் சுகாதார விதிமுறைகள் மீறப்படுகின்றன. அவ்வாறனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பொதுப் போக்குவரத்தில் உரிய முறைமையில், சுகாதார ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவில்லை.

அத்துடன் பொது இடங்களிலும் தனிநபர் இடைவெளியைப் பொது மக்கள் பின்பற்றாத நிலைமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் தொடர்ந்தும் இவ்வாறாகச் செயற்படுவார்களாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார். (கு-இ)




## 17 பொலிஸாருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.28

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுள் 10 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் சுமார் 400 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலும் சிலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

## பி.சி.ஆர். செய்தோருக்கும் தொற்று


கொழும்பு,ஒக்.28

பேலியகொட மீன் சந்தையில் கொவிட்-19 தொற்றுத் தொடர்பில், பி.சி.ஆர் பரிசோதனை நடத்திய உத்தியோகத்தர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த 9 உத்தியோகத்தர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான பொது சுகாதாரப் பரிசோதகர் ருவான் விஜேமுனி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொவிட்-19 தொற்றுக்கு இலக்காகிய உத்தியோகத்தர்களும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)




## புறக்கோட்டைக்குள் நுழைய வேண்டாம்

கொழும்பு,ஒக்.28

புறக்கோட்டை ரயில் நிலையம், பஸ் தரிப்பிடத்துக்கு, நடந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் இந்தப் பகுதிக்குள் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், ரயில்களும், பஸ் நிலையங்களும் சேவையில் ஈடுபடா.

எனவே குறிப்பிட்ட நிலையங்களுக்கு நடந்து செல்வது, ஊரடங்கு உத்தரவை மீறுவதாகக் கருதப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (கு-இ)

## அமெரிக்க இராஜதந்திரிகள் தனிமைப்படுத்தப்படார்!

கொழும்பு,ஒக்.28

அமெரிக்காவில் இருந்து வரும் ராஜதந்திரிகளை இலங்கையில் 14 நாள்கள் தனிமைப் படுத்தும் அவசியமில்லை என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மிக வேகமாக கொரோனாத் தொற்று அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அங்கிருந்து இலங்கை வரும் ராஜதந்திரிகளைத் தனிமைப்படுத்தும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்று ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இந்தப் பதிலை அளித்தார்.

24 மணி நேரத்துக்குள் ஒரு சிலரை சந்திக்கவே அவர்கள் வருகின்றனர் என்பதால், அவர்களைத் தனிமைப்படுத்தும் அவசியமில்லை. இவர்கள் தமது நாட்டில் இருந்து புறப்படும் முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொண்டுள்ளனர். இவர்கள் இலங்கை வந்த பின்னரும், சுகாதார துறையினர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

கிழக்குக் கடல் பரப்பில் கப்பல் ஒன்றில் தீ பிடித்த போது, இராஜதந்திர ரீதியில் செயற்பட்ட விதம் இதற்கு சிறந்த உதாரணம். இந்த இராஜதந்திரிகள் ஊடாக கொரோனா பரவாது என்ற நம்பிக்கையில் அவர்கள் வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

# நாட்டை முடக்க வேண்டி ஏற்படும்

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28
மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு சிலவேளை முழுநாட்டையும் முடக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சுவிஸ்சர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் ஃபர்க்லர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே, பிரதமர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். .

இச் சந்திப்பின்போது இரண்டு நாடுகளுக்கு இடையிலான முதலீடுகள், ஏற்றுமதி சுற்றுலாத்துறை மற்றும் கொவிட்-19க்கு எதிரான செயற்பாடுகள் ஆகியன தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (ந-இ)



# இன்றைய நாள்



**மேடம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் மதிநுட்பம் நிறைந்த செயலால் அபார வளர்ச்சி அடையும். நிலுவைப் பணம் வசூலாகும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**இடபம்:** அத்தியாவசிய பணிகளை பிறரிடம் கெடுப்பதைத் தவிர்க்வும். மனதில் நம்பிக்கையை வளர்த்து செயல்களில் வெற்றி காண்பீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** சமூக நிகழ்வுகள் மனதில் சங்கடத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும்.

**கடகம்:** வாழ்வில் குறுக்கிடும் சிரமங்களை சரிசெய்வீர்கள். குடும்பத்தினர் தேவையான உதவியை சரியான தருணத்தில் வழங்குவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

**சிம்மம்:** செயல்களில்சுறுசுறுப்பு அவசியம். பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதியை தர வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். கடன் பெற நேரிடலாம்.

**கன்னி:** எல்லோரும் உங்கள் மீது நல்ல எண்ணம்கொள்வர்.தொழில்வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். பணப் பரிவர்த்தனையில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** வழக்கத்துக்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழில், வியாபார வளர்ச்சிக்கு நண்பர்கள் தாமாக முன்வந்து உதவுவர். செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் உழைப்பு நண்பரால் பாராட்டப்படும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபார நடைமுறையில் அனுகூலம் ஒருசேர கிடைக்கும்.

**தனுசு:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து வாழ்க்கைத் தரம் மேம்படும். பணவருமானம் கிடைக்கும்.

**மகரம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். பொறுமையுடன் செயல்படுவதால்பலநன்மைகிடைக்கும். தொழில்வளர்ச்சிக்கு புதிய நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** எதார்த்த பேச்சு சிலர் மனதை சஞ்சலப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதலாக பணிபுரிய வேண்டும்.

**மீனம்:** விலகிச் சென்ற நண்பர் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபார வளர்ச்சிக்குத் தேவையான பணியை சிறப்பாகச் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

# வசதி ஏற்படுத்திக் தராவிடின் கொரோனாவை பரப்புவோம்

## கொரோனா நோயாளர்கள் வைத்தியசாலையில் குழப்பம்

கொழும்பு, ஒக்.28
வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்று கிராமத்திற்குள் கொரோனாவைப் பரப்புவோம் என சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் சிங்கள இணைய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திவுலப்பிட்டிய கொரோனா நோயாளர்கள், தங்களுக்கு கிடைக்கும் உணவு சுவையில்லை எனவும், போதுமான அளவு குளியலறை மற்றும் ஏனைய வசதிகள் இல்லை எனவும் கூறி அங்கு குழப்பம் ஏற்படுத்தியுள்ளனர். நோயாளிகள், வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்களை அச்சுறுத்தியதுடன், குறித்த வசதிகளை வழங்கவில்லை என்றால் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்று கிராமத்தில் கொரோனா பரப்புவோம் என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

தற்போது கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ள திவுலபிட்டிய வைத்தியசாலையில் 102 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த குழுவினருக்குள் டொக்யார்ட் நிறுவனத்தில் பணியாற்றிய கொரோனாத் தொற்றுக்குள்ளான 15 பேரே இவ்வாறு வைத்தியசாலை ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். இந்த நபர்களுக்காக டொக்யார்ட் நிறுவனம் உலர் உணவுகளை வைத்தியசாலைகளுக்கு வழங்குகின்றது என வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அச்சுறுத்தல் காரணமாக வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பொலிஸாருக்கும், பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது என அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-இ)

# விவசாயிகளால் தீவைப்பு

## குற்றஞ்சாட்டுகின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்

கொழும்பு, ஒக்.28
வனாதவில்லுவில் உள்ள பரணஎலுவங்குள பகுதியில் அமைந்துள்ள விவசாய நிலங்களில் காணப்படும் பல மரங்களுக்கு விவசாயிகள் திட்டமிட்டவகை யில் தீவைத்து எரித்து அழித்துள்ளனர் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவ்வாறு எரிக்கப்பட்ட மரங்களில் 100 ஆண்டுகளுக்கும் மேலான கும்புக் மரங்களும் அடங்குகின்றன.

காட்டு விலங்குகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு வருவதைத் தடுக்கவே இந்த மரங்களை எரிப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மேலும் தெரிவித்தனர்.

சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த விளைநிலம் வில்பத்து தேசிய பூங்காவிற்கு அருகில் அமைந்துள்ளது. பூங்காவில் உள்ள பறவைகள் விவசாய நிலத்தில் அமைந்துள்ள பிரமாண்டமான மரங்களை முட்டையிடுவதற்கு பயன்படுத்துகின்றன. விவசாயிகளும் விவசாய நிலத்தின் ஒரு பகுதியின் சட்டபூர்வ உரிமையைக் கொண்டிருக்கவில்லை என்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# உள்ளூர் துப்பாக்கி மீட்பு

மட்டக்களப்பு, ஒக்.28
மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காந்திநகர் காட்டுப் பகுதியில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக பயன்படுத்தக் கூடிய நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் கட்டுத் துப்பாக்கியே நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வவுணதீவு பொலிஸார் மீட்கப்பட்டுள்ளது

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ந-இ)

# மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக்.28
வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். (ந-இ)

# பரீட்சை செயன்முறை இலத்திரனியல் மயம்

கொழும்பு, ஒக். 28

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் பரீட்சை நடாத்தும் செயன்முறையை நவீனமயப்படுத்தல் வேண்டுமென அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களம் பிரதானமாக வருடாந்தம் பாடசாலைக் கல்வி தொடர்பான தேசிய பரீட்சைகள் நான்கையும், நிறுவன ரீதியான பரீட்சைகள் 325 இனையும் நடத்தி வருகின்றது. பரீட்சைகளை நடத்துவதில் அதிக பணிகளை திணைக்களத்தின் பணியாளர்கள் பொதுவான அலுவலக முறைகளைக் கையாண்டு மேற்கொள்ளப்படுவதுடன், பரீட்சைகளின் துல்லியத்தையும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக பரீட்சைமுறையை இலத்திரனியல் முறைமைப் படுத்தலின் தேவை தொடர்பாக அமைச்சரவையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் முகாமைத்துவ செயன்முறையை நவீனமயப்படுத்துவதற்காக தேவையான இணையத்தள வசதிகள் உள்ளிட்ட நவீன தொழிநுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அவற்றைப் பயன்படுத்துவதற்காக பணியாளர் குழாமைப் பயிற்றுவிப்பதற்கும், பரீட்சை மதிப்பீட்டுச் செயன்முறையை இலகுபடுத்துவதற்காக மாகாண மட்டத்தில் பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களை நிறுவுவதற்கும் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ.இ)

வவுனியாவில்

## வெளி வியாபாரிகளை தடைசெய்ய வேண்டும்


வவுனியா,ஒக்.28

கொரோனா வைரஸ் தாக்கம் பரவலடைந்துவரும் நிலையில், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளை, வவுனியாவில் வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா மாவட்டத்திலும் வீதித் திருத்தப்பணிகளில் ஈடுபட்டுவரும் சிலருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டு வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தந்து இங்கு வியாபாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தடை விதிக்க வேண்டும். வவுனியாவைப் பொறுத்தவரை வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இங்கு வருகை தந்து, வீதிக்கரைகளிலும்,பொது இடங்களிலும் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது வைரஸ் இலகுவில் பரவலடைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு முன் எச்சரிக்கையாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் இங்கு வியாபாரம் மேற்கொள்வதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றார். (க-ரி3)



அக்கரைப்பற்று பிரதேச கடற்கரையில் கரைவலை மீனவர்களது வலைகளில், பெருந்தொகையான நெத்தலி மீன்கள் அகப்பட்டுள்ளன. (க-இ)

# அதலபாதாளத்துக்குள் நாடு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.28

கொரோனா இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்த தவறியுள்ளதன் மூலம், நாட்டை அடிபாதாளத்துக்குள் அரசு தள்ளியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:



தற்போதைய நிலையில் நாடு இக்கட்டான நிலையில் உள்ளது. இதற்கான பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். நாடு கடும் பின்னடைவைச் சந்தித்துள்ள தற்போதைய சூழலில், அரசு பொறுப்பற்ற முறையில் நடந்துக் கொள்வதைக் கண்டிக்கின்றோம். என்றுள்ளது. இதே வேளை, கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று நாராஹேன்பிட்டிய அபேராமய விஹாராதிபதி முரித்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். சுகாதார அதிகாரிகள் தற்போதைய நிலைமை தொடர்பில் ஏற்கனவே சிந்தித்துச் செயற்படவில்லை. அதனால் தற்போது கொவிட் -19 பரவல் நாட்டில் வியாபித்துள்ளது. அதற்கான பொறுப்பை ஏற்பார் இல்லை. அரச மருத்துவப் பரிசோதனை நிலையத்தின் செயற்பாடு பூச்சியமாகக் காணப்படுகின்றது. அந்த நிலையத்தை தனியாருக்கு வழங்குவதில் பிரச்சினை யுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## கவலைப்படாதே சகோதரா...



சுகி.சிவம்

வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்கள் பிறரது கருத்துகளுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அதற்கொரு எல்லை இருக்கிறது. அந்த எல்லையைத் துல்லியமாக அடையாளம் கண்டு கொண்டவர்கள் மட்டுமே பிறரால் பாதிக்கப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க முடியும். நினைத்த வெற்றிகளைக் குவிக்க முடியும். அளவுக்கு மீறிப் பிறரது விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தால் குழப்பம் வரும்; முன்னேற்றம் தடைப்படும்.

நமது தோற்றம், நாம் உடுத்தியிருக்கும் துணிகள், தலை அலங்காரம், பயன்படுத்தும் பொருள்கள், தனித் திறன்கள் இவற்றைப் பிறர் பாராட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்குமே இருக்கும். அதிலும் இளைய தலைமுறைக்குச் சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் அது நடக்கவில்லை என்றால் தளர்ந்து போவதோ, முகமும் அகமும் வாடுவதோ சரிதானா? பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, பிறர் கேலி செய்துவிட்டால் தளர்ந்து போவது இளைய தலைமுறைக்குரிய இயல்பான விஷயம். இதிலிருந்து வெளியே வாருங்கள் என்று அழைக்கிறேன்.

நம் மீது அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் விமர்சனத்தை மதிக்கலாம். ஆனால் எல்லோருடைய விமர்சனங்களையும் பொருட்படுத்த வேண்டியதில்லை. இந்த அணுகுமுறை நமது வெற்றி மாளிகையின் முக்கியமான படிக்கட்டு என்று நான் கருதுகிறேன்! சரியா?

முற்றும் துறந்து முனிவராகப் போனால்கூட முட்டாள் உலகம் அவரை விடுவதில்லை . குறை சொல்லும்... கேலி பேசும்...

ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

பட்டினத்தார் எத்தனை பெரிய துறவி! கோடிக்கணக்கான சொத்தை அப்படியே விட்டுவிட்டுக் கோவணத்துடன் வெளியேறிய கடுந்துறவி. சோற்றாசை கூட இல்லாத சுத்தமான சன்யாஸி. கையில் ஓடு வைத்திருந்த பத்ரகிரியாரைச் சொத்து வைத்திருக்கும் குடும்பஸ்தன் என்று கிண்டலடித்த அப்பழுக்கற்ற துறவி. அவரையே உலகம் என்ன பாடுபடுத்தியது தெரியுமா?

நடந்த களைப்பால் வயலில் படுத்திருந்தார் பட்டினத்தார். அறுவடை நடந்திருந்த வயல் அது... குச்சி குச்சியாய்ப் பூமியில் இருந்து கிளம்பி அறுபடாதிருந்த வைக்கோல் அவர் உடம்பில் குத்திக் கொண்டிருந்தது. அதைச் சட்டை செய்யாமல் (சட்டை இல்லாமல்) படுத்துக் கிடந்தார். இருக்கும் போதே இறந்து போன மாதிரி இருந்தார்.


அந்த வழியாகப் போன இரண்டு பெண்கள் வரப்பு வழியாக நடந்து போக முடியாதபடி பட்டினத்தார் வரப்பு மீது தலை வைத்துப் படுத்தி ருந்தார். ஒருத்தி, "யாரோ மகான்" என்று அவரை வணங்கி வரப்பிலிருந்து இறங்கி நடந்தாள். மற்றொருத்தியோ, "ஆமாம்... ஆமாம்... இவரு பெரிய சாமியாருக்கும்... தலையணை வைச்சுத் தூங்கற சுகம் மாதிரி வரப்பு மேல தலை வைச்சுத் தூங்கறான் பாரு... ஆசை பிடிச்சவன்" என்று கடுஞ்சொல் வீசினாள்.

அவர்கள் அங்கிருந்து போனதும் எழுந்து உட்கார்ந்த பட்டினத்தார், "ஆஹா... நமக்கு இந்த அறிவு இது நாள்வரை இல்லையே" என்று வருந்தி வரப்பிலிருந்து தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில் அந்த இரண்டு பெண்களும் அதே வழியாகத் திரும்பி வந்தனர். வரப்பிலிருந்து இறங்கிக் கீழே தலை வைத்திருந்த பட்டினத்தாரைப் பார்த்து முதல் பெண் பரிதாபப்பட்டு, "பார்த்தியாடி... நீ சொன்னதைக் கேட்டு உடனே கீழே இறங்கிப் படுத்துட்டாரு... இப்பவாவது ஒத்துக்கோ ... இவரு மகான்தானே..!" என்றாள்.

அவளோ, "அடி போடி... இவனெல்லாம் ஒரு சாமியாரா? தன்னைப் பத்தி யார் யாரு என்ன என்ன பேசுறாங்கன்னு ஒட்டுக் கேக்குறான்... அதைப் பத்திக் கவலைப்படறான் இவனெல்லாம் ஒரு சாமியாரா?" என்று ஒரு வெட்டு வெட்டினாள். பட்டினத்தாருக்குத் தலை சுற்றியது.

எப்படி இருந்தாலும் உலகம் நம்மை விமர்சிக்கும். இது பேருண்மை. தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும். விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன் விமர்சிக்கிறவர்கள் விமர்சனத்தைப் புறக்கணியுங்கள். வெற்றி நிச்சயம்.



# புழுதி விதைப்பும்
## ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாடும்

○ கணேசலிங்கம் நிரோஜன்

யாழ் மாவட்டத்தில் நெற் செய்கையானது மானாவாரி யாக அல்லது புழுதி விதைப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. நெற்செய்கையில் களைகள் மிகப் பெரும் சவாலாக இருக்கின்றன. களைகள், களைவிதைகள் வயலுக்குள் பரவும் வழிகளை இனங்காண்பதன் மூலம் அவற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்த முடியும். இக் களைகள் போசணை, நீர், சூரியஒளி என்பவற்றுக்காக பயிருடன் போட்டியிடும். இதனால் பயிரின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தி நெல்லில் எதிர்பார்த்த விளைச்சலைக் குறைக்கும். அதேவேளை களைக் கட்டுப்பாட்டுக்காக எமது விவசாயிகள் தேவைக்கு அதிகமாக விசிறும் களைநாசினிகள் உற்பத்திச் செலவை அதிகரிப்பதுடன் சூழல் மாசுபாட்டையும் உண்டு பண்ணுகிறது.
பயிர்ச் செய்கையின் எல்லாச் சந்தர்ப்பத்திலும் பொருத்தமான அனைத்துக் களைக்கட்டுப்பாட்டு முறைகளையும் பயன்படுத்தி உற்பத்திச்செலவை குறைப்பதுடன் சூழல் மாசுபாட்டையும், குறைக்கக் கூடிய வினைத்திறனான ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவோம்,

## களை விதைகள் வயலுக்குள் பரவும் வழிகளும், அதனை முகாமைத்துவம் செய்தலும்

**1. எருக்குவியல் மூலம் வயல்களுக்குள் களை விதைகள் பரவுவதனைத் தடுப்போம்.**

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை நெற் செய்கை விவசாயிகள் வயல்களுக்கு உக்கிய இலைச்சருகு இடுவதுடன் அவற்றிற்கு மேலதிகமாக ஏக்கருக்கு 12 ரக்டர் லோட் வன்னியெரு இடுவது வழக்கம். இந்நிலையில் விவசாயிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மாட்டெருவினைக் குவியலாக்கி ஈரப்படுத்தி கறுப்பு பொலித்தீன் பையால் 3 மாதங்களுக்கு மூடி விடுவதனால் களைவிதைகள் முற்றாக அழிந்து விடும். அதன் பின்னரே எருவினை வயலுக்குள் பரவி உழுதல் வேண்டும்.

**2. விதைநெல் மூலம் களைவிதைகள் வயலுக்குள் பரவுவதைத் தடுப்போம்.**

களைவிதைகள் விதை நெல்லுடன் சேர்ந்து வயலுக்குச் சென்று பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு . எனவே விவசாயிகள் விதை நெல்லை, விதைநெல் சுத்திகரிக்கும் நிலையங்கள் மூலமோ அல்லது உப்பு நீர்ப்பரிகரண செயற்பாட்டின் மூலமோ முழுமையாக களைவிதைகளை அகற்றிய பின்னரே விதைக்க வேண்டும்.
யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை பாரம்பரிய விதை நெல்லை பயிரிடும் விவசாயிகளே அதிகம். எனவே உப்புநீர்க் கரைசலில் பரிகரித்து, களைவிதைகளற்ற தரமான விதை நெல்லை விதைக்க வேண்டும்.
100 லீற்றர் பரல் ஒன்றினுள் 75 லீற்றர் நீரை விட்டு நீரினுள் முட்டை ஒன்றை இட்டு கறியுப்பை சிறிது சிறிதாக சேர்க்கவும். முட்டை மிதந்து அதன் சிறிய பகுதி மேலே தெரியத் தொடங்கியதும் உப்புக் கரைப்பதை நிறுத்தவும், இக் குறிப்பிட்ட அடர்த்தி உடைய உப்புநீரில் விதைப்பரிகரணம் செய்ய வேண்டும். மிதக்கும் களைவிதைகள், அரைவயிறன், சப்பிகளை அகற்றிய பின்னர் விதை நெல்லை 2-3 தடவைகள் தூயநீரில் கழுவி பின் நிழலில் உலரவிட்டு விதைத்தல் வேண்டும்.

**3. விதைப்பதற்கு முன்னர் வயல்களில் உள்ள களைகளை அகற்றுவோம்.**

பயிர்ச்செய்கைக்கு முன்னரான களைநாசினிப் பாவனையை இயன்றவரை குறைப்பது நன்று. முறையான நிலப்பண்படுத்தல் முறைகள் வயல்களில் உள்ள களைகளைக் கட்டுப்படுத்துவோம்.
போகம் ஆரம்பிக்க முன் கிடைக்கும் முதல் மழையுடன் முதலாவது நிலப்பண்படுத்தலை சட்டிக் கலப்பையை பயன்படுத்தி உழுவதன் மூலம் வயலிலுள்ள களைகளை அழிக்கலாம் , அதன் பின்னர் 2 வாரங்களின் பின் கிடைக்கும் மழையுடன் 2 வது நிலப்பண்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். இதன் போது வயலில் காணப்படும் முளைத்த களைவிதைகள் முழுமையாக அழிக்கப்படும். இதற்கு முள்ளுக் கலப்பை, சுழல் கலப்பைகளைப் பயன்படுத்தலாம். 2 வது மழை கிடைப்பதற்கு தாமதமானால் முளைத்த புற்களில் புந்துணர்கள் தோன்ற ஆரம்பிக்கும்போது இளம் புந்துணர்களை கிராஸ் கட்டர் மூலம் வெட்டி அகற்ற வேண்டும். இதன் மூலம் புதிய களை விதைகள் வயலுக்குள் பரவுவதைத் தடுக்க முடியும்.



**4 . வரம்புகள் மூலம் களைகள் பரவுவதைத் தடுப்போம்**

விதைப்பதற்கு முன்னரும் பயிர்ச் செய்கையின் போதும் வரம்புகளில் வளரும் களைகள் மூலம் வயலுக்குள் களை விதைகள் பரவுவதைத் தடுப்போம். பயிர்ச் செய்கையின் போது மாதம் ஒரு தடவையாவது கிராஸ்கட்டர் மூலம் புந்துணர்கள் தோன்ற முன்னர் வரம்பிலுள்ள களைகளை வெட்டி அகற்ற வேண்டும்.

**5. பயிர்ச் செய்கையின் போது களைகட்டும் கருவிகள் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துவோம்.**

வரிசையில் விதைத்த வயல்களிற்கு கருவிகள் மூலமும் இயந்திரங்கள் மூலமும் களைகளைக் கட்டுப்படுத்தலாம். கருவிகள் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துவதனால் களைநாசினிகள் விசிற வேண்டிய அவசியம் ஏற்படாது. அதற்கான செலவு குறைவடைவதுடன் சூழல் மாசடைவும் தடுக்கப்படும்.

**5.1 கோனோ களைகட்டும் கருவி**

நெற்செய்கையில் முதலாவது மேற்கட்டுப் பசளை களை இடுவதற்குமுன் சிறந்த முறையில் களைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். கோனோ களைகட்டும் கருவியை முன் பின் அசைத்துக் களைகள் கட்டுப்படுத்துவதன் மூலம் வயல்கள் காற்றோட்டம் பெற்று அதிக மட்டங்கள் தோன்றி விளைச்சல் அதிகரிக்கும். இந்த கருவியைப் பயன்படுத்தி ஒருவர் நாளொன்றிற்கு 3/4 ஏக்கர் வயல்நிலத்தில் களைகளைக் கட்டுப்படுத்த முடியும். இதனைப் பயன்படுத்தி களைகட்ட விதைக்கப்பட்ட இரண்டு நெல் வரிசைகளுக்கு இடைப்பட்ட இடைவெளி 8 அங்குலமாக இருக்க வேண்டும். 3500-5000 ரூபா பெறுமதிக்குள் விவசாயிகள் தாமாகவே இவ் இயந்திரத்தை வடிவமைத்து 5 போகங்களுக்கு பயன்படுத்த முடியும். போறும் கோனோ களைகட்டும் கருவியை இரண்டு நெல் வகைளுக்கு இடையில் பயன்படுத்தும் போது பால் வேர்கள் புதிய போர்கள் உருவாகும் அதனால் அறுவடை செய்யும் காலப்பகுதியில் நெல் சரிந்து விழுவது குறையும் கோண வடிவான அமைப்பு இரண்டு வரிசைகளின் வங்கஎிலும் சேற்றை அணைப்பதால் வியமான மட்டங்கள் உருவாக எதுவாக அமையும் 52 வலுக் களைகட்டும் இயந்திரம் இலேசான குறைந்த வலுவுள்ள வரியைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள சிறிய இயந்திரத்தை வரிசையாக விதைத்த பயிர்களுக்கு இடையில் பயன்படுத்த முடியும் இதன் மூலம் ஒருவரினால் ஒரு நாளில் 2 ஏக்கர் வயலில் களைகளைக் கட்டுப்படுத்த முடி வயல்களுக்குள் பயன்படுத்தும் வகையில் குறைந்த நிறையுடன் திருப்பக் கூடியதாக எளிமையாக வடிவமைக்கப்பட்டு உள்ளது .
மேலும் கோனோ களைகட்டும் கருவியை இரண்டு நெல் வரிசைகளுக்கு இடையில் பயன்படுத்தும்போது பயிரின் பால் வேர்கள் அறுந்து புதிய வேர்கள் உருவாவதால் நெற்பயிரில் அதிக மட்டங்கள் உருவாகி அறுவடை செய்யும் காலப்பகுதியல் நெல் சரிந்து விழுவது குறையும். கோண வடிவான அமைப்பு இரண்டு வரிசைகளின் ஓரங்களிலும் சேற்றை அணைப்பதால் வீரியமான மட்டங்கள் உருவாக ஏதுவாக அமையும்.

**5.2 வலுக் களைகட்டும் இயந்திரம்**

இலேசான குறைந்த வலுவுள்ள எஞ்சினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இச் சிறிய இயந்திரத்தை வரிசையாக விதைத்த பயிர்களுக்கு இடையில் பயன்படுத்த முடியும். இதன் மூலம் ஒருவரினால் ஒரு நாளில் 2 ஏக்கர் வயலில் களைகளைக் கட்டுப்படுத்த முடியும். வயல்களுக்குள் பயன்படுத்தும் வகையில் குறைந்த நிறையுடன் (16-18 கிலோ) திருப்பக்கூடியதாக எளிமையாக வடிவமைக்கப்பட்டு உள்ளது.

**5.3 கைகளால் களைகளைப் பிடுங்குவோம்**

உரிய முறையில் நிலப்பண்படுத்தல் மூலம் களைகளை அகற்ற முடியாத விவசாயிகள், வரிசையில் விதையிடத் தவறிய விவசாயிகள் இயலுமானவரை கைகளால் களைகளைப் பிடுங்கி அகற்றுவதன் மூலம் உரிய பயிர் விளைச்சலைப் பெற முடியும். கைகளால் களைகளைப் பிடுங்குதல் தற்காலத்தில் உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்வதுடன் உரிய காலத்தில் கூலியாட்கள் கிடைக்காமையும் சவாலாக இருக்கின்றது.

**6. பயிர்ச்செய்கையின் போது இரசாயனக் களைக்கட்டுப்பாட்டை இயன்றளவு குறைப்போம்.**

களைகளால் பயிர்ச் செய்கையில் பொருளாதார இழப்பு ஏற்பட இருக்கிறது என விவசாயிகள் கருதும் சந்தர்ப்பங்களில் மட்டும் பிரதேசத்திற்கு பொருத்தமான களைநாசினியை விவசாயப் போதனாசிரியரின் ஆலோசனையைப் பெற்று உரிய காலத்தில் உரிய அளவில் விசுறுதல் வேண்டும். பல்வேறு களைநாசினிகளை ஒன்றாகக் கலந்து விசிறுவதை தவிர்த்தல் வேண்டும். களைநாசினி விசிற வலு தெளிகருவி (power sprayer) இயன்றவரை தவிர்த்துக்கொள்ளவும். குறிப்பாக புற்கள் 2-3 இலைகளில் இருக்கும் போதே களைநாசினியை விசிறுவதால் வினைதிறனான களைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியும். களைநாசினி விசிற தட்டையான விசிறி முனையைப் பயன்படுத்துவது மிகவும் உகந்தது.
களைநாசினி விசிறுவதன் மூலம் மட்டும் களைகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. எனவே ஒருங்கிணைந்த களைக்கட்டுப்பாட்டு முறைகள் மூலம் மட்டுமே களைப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண முடியும். குறிப்பாக நாம் அனைவருமே வரிசை விதைப்பிற்கு மாறுவோம். விமர்சனங்களைக் கடந்து மாற்றம் எங்கள் ஒவ்வொருவரிலிருந்தும் ஆரம்பிக்கட்டும்.

# அரைகுறையில் வீட்டுத் திட்டம் மழையால் அந்தரிக்கும் மக்கள்

## வடக்கில் இந்தப் பரிதாப நிலை

**யாழ்ப்பாணம், ஒக். 28**

**வடக்கு மாகாணத்தில் சகல இடங்களிலும், கடந்த ஆட்சிக் காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கான பெருமளவு பணம் விடுவிக்கப்படாததால், வீடுகளைக் கட்டி முடிக்க முடியாது மக்கள் அந்தரிக்கின்றனர்.**

நீண்டகாலமாக வாழ்ந்து வந்த குடிசைகளை அகற்றி, கல்வீடுகளை அமைத்த மக்கள் அந்த வீடுகளைக் கட்டி முடிக்க முடியாது மழை ஆரம்பித்துள்ள நிலையில் மிகவும் துன்பங்களைச் சந்தித்து வருகின்றனர்.

நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள், முதியவர்களைக் கொண்ட குடும்பங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்கான பணம் இன்று வரும், நாளைவரும் என்று காத்திருந்த அவர்களுக்கு இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்களுடைய இந்த நிலை தொடர்பில் தற்போதைய புதிய அரசு அசண்டையாகவே இருந்து வருகிறது என்றும், அதிகாரிகள்கூட அது தொடர்பில் மௌனம் காத்து வருகின்றனர் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட திருமுறிகண்டிக் கிராமத்தில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கு தலா இரண்டு லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று அந்த மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களுக்கு 75 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஏழு லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளுக்கு வெறும் 75 ஆயிரம் ரூபாவை மட்டும் வழங்கியுள்ளதால், வீட்டை நிறைவுசெய்து குடியிருப்பதில் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே இது தொடர்பில் அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளை எடுத்து, அந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய மிகுதிப் பணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (ப-ரி1)

## மரண அறிவித்தல்

### கணபதி கதிர்காமநாதன்



வைரவர் கோவிலடி மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், சரசாலையை வசிப்பிடமாகவும் தற்போது சுன்னாகம் தெற்கில் வசித்து வந்தவருமான கணபதி கதிர்காமநாதன் அவர்கள் நேற்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், பகீரதி (லண்டன்), பகீரதன் (லண்டன்), பகீகரன், பகீஷா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கிருபாகரன் (லண்டன்), நிறோஸ், தர்சியா நேருவாசன், தேவயாணி, கௌதமன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவநாதன் (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), செந்தில்நாதன் (லண்டன்), கணேசநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நளினி, குணசேகரம், கலைசெல்வி, றோகினி, தங்கராசா, சிவராசா, திலகவதி, சரஸ்வதி (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனரும், அபிநந், மேனுஷா, கௌரிகன், கலியுகநிலன், ஸ்வைஷ்ணவி, பார்கவி ஆகியோரின் பெரியப்பாவும், சயந், ஜசிக்கா, சஜித், ஆருஷ், அனுஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திண்ணைக்கலட்டி,**
**சுன்னாகம் தெற்கு.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 550 7185**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 | 20 |
| 07 | 10 |
| 1947 | 2020 |



### கந்தையா கனகசுந்தரம் (இராசலிங்கம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் பிரான்சில் வசித்தவருமாகிய கந்தையா கனகசுந்தரம் (இராசலிங்கம்) அவர்கள் கடந்த 20.10.2020 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பவளம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், பிரான்சில் வசிப்பவர்களான சசீலா, ரவிக்குமார், விஜயகுமார், அனுஷியா ஆகியோரின் பாசமிகு அப்பாவும், அருணா (பிரான்ஸ்), ரஜனி (கிளிநொச்சி), கயந்தி (பிரான்ஸ்), பேரின்பநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அன்னபூரணம் (ஊர்காவற்றுறை), இராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்), தேவராசா (யாழ்ப்பாணம்), ராகவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அபிசன், சரன், சானுஜா, தமிழ்குமரன், புவியரசன், லக்வினி, பிரவீனா, டினோஸ், அபிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2020) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன்: ரவிக்குமார்**
**066 288 5968**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 27 |
| 02 | 10 |
| 1934 | 2020 |



### திருமதி சபாரத்தினம் அசலாம்பிகை

சரவணை மேற்கு கதிர்வேலாயுத கோவிலடியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் அசலாம்பிகை நேற்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதர் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாரத்தினத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், தமிழ்நாதன், தமிழ்அழகன், அருட்செல்வி, தயாளன், கரன், அன்பழகி ஆகியயோரின் அன்புத் தாயாரும், கௌரி, கமலா, ஞானேஸ்வரன், நித்தியானந்தன், விஜி ஆகியோரின் மாமியும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 90 வீத கட்டில்கள் நிரம்பின

கொழும்பு, ஒக். 28

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து செல்லும் நிலையில், அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மருத்துவமனைகளில் இன்னமும் 10 சதவீதமான கட்டில்களே உள்ளன. இவ்வாறு சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல்பிரிவின்விசேட மருத்துவர் சுகத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 'கொரோனாநோயாளிகளுக்குசிகிச்சைக்காக ஒதுக்கப்பட்ட மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளில், 90 சதவீதம் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. மேலும் 10 சதவீதமான படுக்கைகள் மாத்திரமேமீதம்காணப்படுகின்றன. தற்போதுள்ள படுக்கைகள் போதுமானதாக இல்லாவிட்டால், சுகாதாரஅமைச்சு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியதுஅவசியம்'–என்றார். (ஒ-இ)

# அதிகாரப்போட்டிக்கு இலங்கை இடமல்ல

## வல்லரசுகளின் ஆட்டத்துக்கு எதிராக ஜே.வி.பி. காட்டம்

கொழும்பு, ஒக். 28

சீனாவின் அச்சுறுத்தலுக்கு எதிராக ஆசிய பிராந்தியத்தில் சுதந்திர வலயம் ஒன்றை ஏற்படுத்துவதே அமெரிக்க இராஜாங்க செயலர் மைக்பொம்யோவின் இலங்கைப் பயணத்துக்கான நோக்கமாகும்.




வல்லரசு நாடுகளின் அதிகாரப்போட்டிக்கு இலங்கையை இரையாக்க அரசு இடமளிக்கக்கூடாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரை செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார். அமெரிக்க இராஜாங்க செயலாளரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி அமெரிக்க தூதரகத்துக்கு முன்னால் நேற்று மேற்கொண்ட அமைதிவழி போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ஒ-இ)

## வவுனியா வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் ஆகியனவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2021

01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரையான ஒரு வருட காலப்பகுதிக்குரிய பின்வரும் குத்தகைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் (தொ.பே.இல. 0242260914) பின்வரும் நிபந்தனைகளுடன் உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இ ல. | குத்தகை விபரம் | நிரந்தர கொல்களம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை, வருடாந்த குத்தகை (ரூபா.) | மீளளிப்பு வைப்பு (ரூபா.) | கேள்விப் படிவக்கட்டணம் (ரூபா.) |
|---|---|---|---|---|---|
| 01 | ஆண்டியாபுளியங்குளம் மாட்டிறைச்சிக்கடை | சூடுவெந்தபுலவு | 582,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 02 | மாங்குளம் மாட்டிறைச்சிக்கடை | | 541,200.00 | 8,000.00 | 1,000.00 |
| 03 | சின்னச்சிப்பிகுளம் மாட்டிறைச்சிக்கடை | | 132,350.00 | 8,000.00 | 1,000.00 |
| 04 | சூடுவெந்தபுலவு மாட்டிறைச்சிக்கடை | | 590,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 05 | பாவற்குளம் மாட்டிறைச்சிக்கடை | | 467,705.00 | 8,000.00 | 1,000.00 |
| 06 | செட்டிகுளம் மாட்டிறைச்சிக்கடை | | 298,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 08 | செட்டிகுளம் மீன்கடை | - | 115,000.00 | 8,000.00 | 1,000.00 |
| 09 | சூடுவெந்தபுலவு மீன்கடை | - | 19,325.00 | 8,000.00 | 1,000.00 |
| 10 | மாங்குளம் மீன்கடை | - | 451,100.00 | 8,000.00 | 1,000.00 |
| 11 | அருவித்தோட்டம் சுற்றுலாமையம் | - | 17,200.00 | 5,000.00 | 1,000.00 |
| 12 | செட்டிகுளம் பொது மலசலகூடம் | - | 6,000.00 | 5,000.00 | 1,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் காலம் - 28.10.2020 – 10.11.2020ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி - 11.11.2020ம் திகதி காலை 10.00 மணி
3. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் காலம் - 11.11.2020ம் திகதி காலை 10.00 மணி
4. 11.11.2020ம் திகதி காலை 10.00 மணிக்குப்பின்பு கிடைக்கப்பெறும் கேள்வி விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
5. கேள்விப்படிவங்கள் இரண்டு பிரதிகளில் வழங்கப்படும். அவை இரண்டையும் ஒரே மாதிரியாக பூரணப்படுத்தி தனித்தனி தபால் உறைகளில் இட்டு தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர், கடையின் பெயர் என்பன தெளிவாக இடப்பட்டு அரக்கு முத்திரையிட்டு செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் மதவாச்சி பிரதான வீதி, செட்டிகுளம், வவுனியா எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது பிரதேசசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ உரிய நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படுதல் வேண்டும்.
6. கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்பும் விண்ணப்பதாரிகள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் செட்டிகுளம் பிரதேசத்தில் வசிப்பவர் என்பதற்கான கிராம சேவையாளரின் சான்றிதழுடன் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்பிரதியுடன் நேரடியாக சமூகமளித்தல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தினைப் பெறுபவர் ஏற்கனவே பிரதேச சபையினால் தவறுநராக கணிக்கப்பட்டு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எவ்வித நிலுவைக்கட்டணங்களையும் முன்னைய காலங்களில் அல்லது நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக இருந்தால் அவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
8. ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களது கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்பட மாட்டாது.
9. கேள்வி திறத்தலின்போது கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்டவர் பார்வையாளராக கலந்து கொள்ள முடியும்.
10. அதிகூடிய கேள்வித்தொகையினை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படுவதுடன், அவர் குத்தகை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்விதாரரின் கேள்வித்தொகை திருப்தியாக அமைந்தால் பரிசீலிக்கப்படலாம்.
11. சித்தியெய்தும் கேள்விதாரர் 11.11.2020ம் இருந்து 07 நாட்களிற்குள் வருடாந்த குத்தகையின் 1/3 பங்கு வைப்புத் தொகையைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படுவதுடன் கேள்வி வைப்பும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. வருடத்தின் வழமையான போயா தினங்கள் மற்றும் வெசாக், பொசன் தினங்களில் இறைச்சி, மீன் கடைகள் மூடப்படுவதோடு அதற்காக குத்தகை கழிவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.
14. இறைச்சிக்கடை, மீன்கடை, பொதுச்சந்தை மற்றும் சுற்றுலா மையம் என்பன குத்தகைக்கு வழங்கப்பட்ட பின்னர் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தொடர்ந்து மூடிக்காணப்பட்டால் அந்நாட்களுக்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.
15. கச்சேரியினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைப்பட்டியலுக்கு அமைவாகவே மாட்டிறைச்சி, மீன் என்பன விற்பனை செய்யப்பட வேண்டும்.
16. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு** – கேள்விச்சபையின் தீர்ப்பே இறுதியானது.

**பிரதேச சபை,**
**வெங்கலச்செட்டிகுளம்.**
**28.10.2020**

**ஆசீர்வாதம் அந்தோனி**
**கௌரவ தவிசாளர்,**
**பிரதேச சபை,**
**வெங்கலச்செட்டிகுளம்.**

# பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு

## ஜி.எல்.பீரிஸ் தகவல்

ஈஸ்ரர் குண்டுத்தாக்குதல் தொடர்பானஅறிக்கைகிடைக்கப்பெற்றதும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு இடம்பெறும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்தகவல்வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பானவிசாரணைகளை ஜனாதிபதிஆணைக்குழுமுன்னெடுக்கின்றது. அதன் இறுதி அறிக்கை விரைவில் கிடைக்கும். அதன் பின்னர் பாதுகாப்புத்துறை உள்ளிட்டஅனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள்கொண்டுவரப்படும்.

ஆணைக்குழுமுன்பாகசாட்சியங்கள்அளிப்போர்வழங்கும் தகவல்களால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தத்தாக்குதலுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள், நிதி வழங்கியவர்கள், ஆதரவளித்தவர்களைக்கண்டறிந்து அவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ஒ-இ)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

(ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர்)



**தோற்றம்** 31.10.1936 **மறைவு** 27.10.2020

குரும்பைகட்டி புலோலி வடமேற்கு புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை நேற்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி சிவமலர் (ஓய்வு நிலை ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி). அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னாத்தை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதி நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பாரதிதாசன், காயத்ரி (சிங்கப்பூர்), சங்கீதா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரவெட்டி) அவர்களின் பாசமிகு தந்தையும், திருவருட்செல்வி (சமுர்த்தி வங்கி முகாமையாளர் மருதங்கேணி), நவலிங்கம் (பொறியியலாளர் சிங்கப்பூர்), கபிலன் (பட்டதாரி பயிலுநர் பிரதேச செயலகம் கரவெட்டி), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, பசுபதி, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்பிரமணியம் (கொலண்ட்), பேராசிரியர் சிவநாதன் (யாழ் பல்கலைக் கழகம்), சிவராணி (UK), சிவயோகமணி (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், அமிர்னா (சிங்கப்பூர்), ஜனார்த்தனி, சங்கீர்த்தனி, ஜனோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
0773618064

# கடல் பெருக்கால் வயல்கள் நாசம்



கிளிநொச்சி, ஒக்.28

கிளிநொச்சி, பூநகரியில் கடல் திடீரென பெருக்கெடுத்ததால் சுமார் 40 ஏக்கர் வயல் நிலங்களுக்குள் உவர்நீர் புகுந்துள்ளது என்று பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் கௌதாரிமுனை தரைப்பகுதியில் நேற்றுப் பகல் நடந்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கால் கௌதாரிமுனை வீதியும் சில மணிநேரம் வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டு, அவர்கள் அங்கு சென்று கள ஆய்வு மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# பஸில் ராஜபக்ச எப்போது நாடாளுமன்றம் வருவார்?

## கெஹலிய மழுப்பல்

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் பஸில் ராஜபக்ச எப்போது நாடாளுமன்றம் வருவார் என்று எழுப்பட்ட கேள்விக்கு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல மழுப்பல் போக்கில் பதிலளித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. 20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, பஸில் ராஜபக்ச எப்போது நாடாளுமன்றம் வருவார் என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் கெஹலிய, அது தொடர்பில் அவரிடமும் (பஸில் ராஜபக்ச), ஜனாதிபதியிடமும் தான் கேட்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (ஒ-44)


## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 08 கொழும்புத்துறை வீதியில் ஆதன இலக்கம் 236/20 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது. சம்பந்தர் மாணிக்கவாசகரும் Dr. வெற்றிவேலும் என்ற பெயரிலே ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது

பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 29.08.2012ஆம் திகதியிட்ட 694 இலக்க உறுதி மூலம் Dr.வெற்றிவேலு மகேஸ்வரன் நில.பரப்பு 2. குளி 5. 5 விஸ்தீரணமான ஆதனம் நில.பரப்பு 4 குளி 3.4 நிலபரப்பு 5 குளி 12.7 மற்றும் நிலபரப்பு 2 குளி 13.6 விஸ்தீரணமான ஆதனங்கள் என்பவற்றை வைத்திலிங்கம் கிருபாகரனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

இவ்வுறதியின் தாயுறுதி நொத்தாரிசு பி.காசிப்பிள்ளை முன்பாக 1934ஆம் ஆண்டு, ஜப்பசி மாதம் 20ஆம் திகதி 530 இலக்க உறுதி எனவும் அவ்வுறுதி மூலம் சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலும் பெண் பராசக்தியும் ஆகியவர்களுக்கு அறுதி மூலம் உரித்து வந்தடைந்தது என குறித்த 694ஆம் இலக்க உறுதியில் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனங்களினை நொத்தாரிசு J.S.A.மருதநாயகம் முன்பாக 2016.05. 04 திகதிய 2610 இலக்க உறுதி ஊடாக வைத்திலிங்கம் கிருபாகரன், யேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டன் உம் பெண் சுதர்சினிக்கு ஆகியோருக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்

பின்னர இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற நில.பர. 1 விஸ்தீரணமான ஆதனத்தை ஜேசுதாசன் ஜோய்ஸ்நியூட்டன் உம் பெண் சுதர்சினியும் நொத்தாரிஸ் J.S.A மதுரநாயகம் முன்பாக கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினிக்கு 2016.09.27 திகதியில் 2927ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி ஊடாக அறுதியாக விற்றுள்ளனர். பின்னர் ஆதன அட்டவணையில் ஏற்பட்டுள்ள தவறு 12.10.2020 ஆம் திகதி பிரசித்த நொத்தாசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 6108 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட திருத்தல் உறுதி ஊடாக திருத்தப்பட்டுள்ளது.

ஆதனடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று இறை பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவகர் பிரிவு J/62 ஆசைவளவும் பெரிய வளவும் திடலிற் புலமும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ. சந்தியாப்பிள்ளை 1-8 தண்டங்களால் பிரிவிட்டு வரைந்த 352ஆம் இலக்கப்படத்தின் விஸ்தீரணம் நிலப்பரப்பு 35 குளி 3.7 இதில் குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 35 குளி 3.7 இதில் குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 2 குளி 5.5 அதற்குரியவைகளும் இதில் ஏற்கனவே அறுதியாக விற்ற பகுதிபோக மிகுதி வடக்குப்பக்கமாக நிலபரப்பு 1 இதற்கு எல்லை

கிழக்கு :- குறித்த படத்தில் துண்டு 7 எனச் சுட்டப்பட்ட பாதை நிலம்
வடக்கு :- யோகராசா பெண் தர்சினி ஆதனம்.
மேற்கு : - வாய்க்கால்,
தெற்கு :- கிரிஷாந்தன் மயூர்தினியின் ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினியும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி சுதாகரன் உம் பெண் குமுதினியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிகளை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**இம்மனுவல் ஆனோல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை**

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 21 முஸ்லிம் கல்லூரி வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 217/19 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் ஜட்ருஸ் மரிக்கார் சாகிபுடீன் எனும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 31/10/2019ஆம் திகதி 11478ஆம் இலக்கத்தில் ஓர் அறுதி உறுதி நிறைவேற்றப்பட்டு புத்தளம் மன்னார் வீதி 11 ஆம் குறுக்குதெரு 2ஆம் ஒழுங்கை இல:- 27/19 ஜச் சேர்ந்த அபூபக்கர் அனஸ் கைம்பெண் ஆயிஷாபானு மறுநாமம் வசந்தி என்பவர் முகம்மட் சம்சுதீன் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த 11478ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு எஸ்.இளங்கோவன் முகதாவில் 18.03.2012 ஆம் திகதி 7281ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் புத்தளம் நாகவில்லு 354A, இட்ரூஸ் மரிக்கார் சகிபுடீன் ஆகியவர் 27/19ஆம் 2ஆம் ஒழுங்கை 11ஆம் குறுக்குதெரு மன்னார் வீதி புத்தளம் ஆயிஷாபானு அனஸ் அல்லது வசந்தி என்பவருக்கு சொரியலாக 1/2 வாசி ஆதனம் அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைக்கப்பட்டதாக உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

குறித்த 7281 ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு மெ.பி இப்திகார் முகம்மட் முகதாவில் 17.06.2009 திகதியில் 8957ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுல்தான் அப்துல் காதர் முத்துராசா மகள் குரைசா என்பவர் இட்ருஸ் மரிக்கார் சகிபுடீன்க்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைப்பதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த 8957ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியாக பிரசித்த நொத்தாரிசு எம்.எம் சுல்தான் முகதாவில 4.02.1967ஆம் திகதியில் 5158ஆம் இலக்க அறுதி உறுதியில் வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த தம்பி மரைக்கார் சுல்தான் அப்துல் காதர் கைம்பெண் மூசலும்மா வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை சேர்ந்த சுல்தான் அப்துல்காதர் முத்துராஜா மகள் குரைசாவிற்கு அறுதியாக விற்று ஆட்சியை ஒப்படைப்பதாக கூறப்பட்டுள்ளது.

இவ்வுறுதிகளிலே 7281ஆம் இலக்க உறுதியும், அதன் முன்னுறுதிகளிலும் ஆதனம் முறையாக நிந்தப்படுத்தப்படாது சொரியலாக காணப்படுவதனால் அது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவிக்க இப் பத்திரிகை பிரசுரம் மேற்கொள்ளப் படுகிறது.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம். பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/87 வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை "கள்ளியடி" விஸ்தீரணம் நில - 4 இதில் சொரியலாக 1/2 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சுப்ரமணியம் அவர்கள் 26/09/2009ஆம் திகதி தயாரித்த 1242ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டபடியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் குளி 6.15

கிழக்கு - அசனா மரைக்கார் பெண் றகுமத் நாச்சியாவினதும் மறுபேரினதும் ஆதனம்
வடக்கு - முத்து முகமதுவினதும் மறுபேரினதும் ஆதனம்
மேற்கு - ஜின்னா விளையாட்டு மைதானம்
தெற்கு - முகமது மொகிதீன் பக்கீரினதும் மறுபேரினதும் ஆதனம்

தற்போது மொகம்மட் சம்சுதீன் என்பவர் தற்போது ஆதனத்தை நிந்தப்படுத்தி இவ் வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகம்மட் சம்சுதீன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றும் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனோல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை**

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றில் உறுப்பினராக உள்ள
**வைத்திய கலாநிதி சபாரட்ணம் கணேசன்** அவர்களின் சகோதரி
**செல்வி சபாரட்ணம் கௌரி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரிமன்றம்**

## வேலையாள்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும்
**சைவ உணவகத்திற்கு**
**சமையலாளர், சமையல்**
**உதவியாளர்.**
உடனடியாகத் தேவை.
தங்கி நின்று வேலை
செய்வோருக்கு முன்னுரிமை.

**076 986 5027, 077 756 1341**

## கண்ணீர்க் காணிக்கை

### தங்கவேலாயுதம் கிருபாகரன்



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட உயிரியல்
பிரிவு 95/96 கல்வியாண்டு
சக நண்பனின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு
பேரதிர்ச்சிக்கு உள்ளானோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்பதுடன்
அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**95 / 96 பிரிவு நண்பர்கள்**
**விஞ்ஞான பீடம்**

மலர்வு 05.06.1971 உதிர்வு 26.10.2020

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை அருணகிரிராஜா

(ஓய்வு பெற்ற வர்த்தக முகாமையாளர்
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்)



**தோற்றம்** 10.05.1942 **மறைவு** 26. 10.2020

யாழ். கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை அருணகிரிராஜா நேற்றுமுன்தினம் (26.10.2020) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணசாமி - அழகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அதிரூபவதி அவர்களின் அன்புக் கணவரும் பவானி, காலஞ்சென்ற இந்துமதி மற்றும் நளாயினி (சுவிஸ்), சிறிதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடத் திணைக்களம் யாழ்ப்பாணம்), துஸ்யந்தன் (பெல்ஜியம்)ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குணசிங்கராஜா மற்றும் நடராஜா.காலஞ்சென்ற சிவராஜா மற்றும் தவராஜா, செல்வராஜா, சண்முகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராஜன், நிவேதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், புகலேஸ்வரன், தாங்கேஸ்வரன், இலங்கேஸ்வரன், காலஞ்சென்றவர்களான அழகேஸ்வரன், சிவனேஸ்வரன், கருணேஸ்வரன், சாந்தேஸ்வரன், ஜெயநாயகவதி, காஞ்சனாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷான் (சுவிஸ்), ஆகாஷ் (பெல்ஜியம்)ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறிதரன் +94778236845
துஸ்யந்தன் +32493320541
நளாயினி +41718411960

**தகவல்: குடும்பத்தினர்.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 16 . 12 . 1971
விண்ணில் 28 . 10 . 2017


### அமரர் பீற்றர் அன்ரன் யூட்றொபின்

எம் வாழ்வின் விடி வெள்ளியாய்
வசந்த வாசல் தனில் ஒளி வீசி
வாழ வழிகள் பல காட்டி - எமைப்
பாசக்கரத்தால் அரவணைத்த தெய்வம் நீர்
சலனம் ஏதுமின்றி கானல் நீராய்
கரைந்துபோனாலும் - உம் பாச
நினைவுகள் என்றும் எமைவிட்டுப் பிரியாது.

இல.13/1, புனித அன்னாள் வீதி,
சுண்டுக்குளி.

அன்புடன்
**மனைவி, மகன்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 06 . 08 . 1938
உதிர்வு 28 . 09 . 2020

### அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை ( ரக்ரர் செல்லத்துரை )

கடந்த 28.09.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை ( ரக்ரர் செல்லத்துரை ) அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோ ருக்கும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.10.2020) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம் .

தற்போது நிலவும் கொரோனா சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரையும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு அழைக்க முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம் .

**இல. 31, 6 ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா.**

**குடும்பத்தினர்**
**077 126 1813**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 01 . 1952
மறைவு 28 . 10 . 2019

### அமரர் செபமாலை ஜோன் அல்பிரட்

(அரியம்)

புன்னகை பூத்த மலரொன்று பூமியில்
விதைக்கப்பட்டது போல எம் குடும்பத்தை இப்
பூமியில் விதைத்து அன்பாலே யாவரையும் வாயினாற்
பாடி, மனத்தினாற் கவர்ந்து இன்னல்கள் இன்றி
வையத்துள் வாழ்வாங்கு எம்மை வாழ்பவர்களாக வளர்த்து
விட்டாய் காலங்கள் கரைந்தோட காலனவன் பிடியில்
காவியமாய் ஓராண்டு கடந்தும் உங்கள் பூமுகத்தை
காணாது தவிக்கின்றோம் அப்பா
நாம் உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**செம்பியன்பற்று வடக்கு,**
**செம்பியன்பற்று.**

**உங்கள் அன்பு**
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்**

## தீவிரமாகிறது...

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஜா எல பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான ஆண் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் நேற்றுப் பிற்பகல் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டம், வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரும், கொம்பனித்தெருவைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணுமே உயிரிழந்துள்ளனர். இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 13 பேர் ஆண்களாவர். 6 பேர் பெண்களாவர்.

கொரோனாத் தொற்றால் ஒரே நாளில் மூவர் உயிரிழந்துள்ளமை நாட்டு மக்களைப் பேரச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றது. ஆனால், அரசோ கொரோனா இன்னமும் சமூகத் தொற்றாக மாறவில்லை எனவும், அது கொத்தணிப் பரவல் நிலையில் மட்டுமே உள்ளது எனவும் தெரிவித்து வருகின்றது. (ம-22)

## இலங்கை வந்தார்...

பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ மற்றும் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் மார்க் டீ எஸ்பர் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்தியா வந்திருந்தனர். தற்போது இலங்கைக்கான இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றிரவு 7.37 மணியளவில் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக ஈடுபாடு தொடர்பாக இலங்கை அரசியல் தலைவர்களுடன் அவர்கள் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

## மணிவண்ணன்...

நீதிமன்றம் தவணையிட்டது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது. அதனடிப்படையில் வி.மணிவண்ணன் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது. தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார். மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸுன் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் அழைக்கப்பட்டது. மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து இன்று புதன்கிழமை கட்டளை வழங்கப்படும் என்று நீதிபதி தவணையிட்டார். (ம-26)

## அநாவசிய...

மாவட்ட மக்கள் அநாவசியமின்றி வீட்டுக்கு வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். யாழ்ப்பாணத்தில்கொரோனா அச்சத்தால் முடக்கப்பட்டுள்ள இரு பகுதிகளும் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர் ஆகியோரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளுக்கேற்ப செயற்பட வேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மினுவாங்கொட கொரோனா கொத்தணியை விட பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணிப் பரவல் தீவிரமடைந்து செல்கின்றது. பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய சகலரும் பி.சி.ஆர். பரிசோதனைகளைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். கட்டாயத் தனிமைப்படுத்தலிலும் ஈடுபட வேண்டும்.

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர்கள் பல மாவட்டங்களில் இருந்து கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கரையோரத்தைச் சேர்ந்த இரண்டு பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. அங்கு வெளியாட்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்ட மக்கள் அநாவசியமின்றி வீட்டுக்கு வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். சுகாதார வழிகாட்டல்களை ஒவ்வொரு பிரஜை யும் பின்பற்ற வேண்டும், என்றார். (ஒ,5,22)

## கட்டுப்பாடு...

துடைய ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வீதியில் பயணித்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. காரைச் செலுத்தி வந்தவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் உடல் அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26,20)

## 40 பேருக்கு...

குருநகரில் தொற்றுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் தொடர்புடைய நபர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. குருநகர் மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் பாஷையூரில் உள்ள கடலுணவு நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு தொற்றுள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் 40 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்கு இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ)

## சமூகத் தொற்று...

சாலை மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணிகள் ஊடாகத்தான் பலர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

உலக நாடுகளில் நாள்தோறும் ஆயிரக்கணக்கோனோர் கொரோனாவால் உயிரிழக்கின்றனர். ஆனால், இலங்கையில் நேற்று மட்டும்தான் ஒரே நாளில் மூவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதியிலிருந்து நேற்று (ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி) வரை 19 பேரே உயிரிழந்துள்ளனர். தொற்றாளர்கள் அதிகரித்தால் உயிரிழப்புகள் இடம்பெறுவது வழமை. இது தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவின் மூன்றாவது அலை சமூகத் தொற்று ஆகிவிட்டது எனவும், நாடு முழுவதையும் உடன் முடக்குமாறும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும், எதிர்க்கட்சிகளும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. ஆனால், எமது ஆய்வின் பிரகாரம் கொரோனாவின் மூன்றாவது அலை இன்னமும் சமூகத் தொற்றாக மாறவில்லை. கொத்தணிகள் ஊடாகத்தான் பலர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் நாம் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றோம். அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவசியமாகும்.

நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. ஆனால், ஆபத்து உள்ள பகுதிகளில் மாத்திரம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். மக்கள் உணவுக்குக் கையேந்தும் நிலையை அரசு ஒரு போதும் ஏற்படுத்தாதுஎன்றார். (எ-22)

## குருநகர்...

மாட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குருநகரில் இருந்து பேலியகொடவுக்குச் சென்றுவந்த இருவருக்குக் கொரேனொத் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் மாலை உறுதிப்படுத்தப்பட்டது. அந்தப் பகுதிகள் கொரோனா கொத்தணியாக உருவெடுக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது.

குருநகர் மக்களின் இயல்பான வாழ்வியல் முறை, அங்கிருக்கக்கூடிய சன நெருக்கடி ஆகியவற்றைக் கருதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய மக்களும் பெரும் அச்சத்துக்கு உட்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வெளிநபர்கள் எவரும் குருநகர் மற்றும் பாஷையூருக்குச் செல்ல முடியாதவாறும், அங்கிருக்கக்கூடியவர்கள் வெளியில் செல்ல முடியாதவாறும் முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து அந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (ம-26)

## 4 மணிநேரத்தின்...

பயன்படுத்த வேண்டும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பொது சுகாதார சிறப்பு மருத்துவர் உத்பலா அமரசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

4 மணித்தியாலங்களில் பயன்படுத்திய பின்னர் அகற்றப்படும் முகக் கவசத்தை பாதுகாப்பாக அகற்றி குப்பைத் தொட்டியில் போட வேண்டும். பின்னர் புதிய முகக் கவசம் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும். வேலைக்கு செல்வோர், அத்தியாவசிய தேவைக்காக வெளியில் செல்வோர் இந்த நடைமுறையைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உபயோகித்த முகக் கவசத்தை ஆங்காங்கே போடுவதால் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துக்கள் அதிகம். முகக் கவசம் அணியும்போது வாய் மற்றும் மூக்கு முழுமையாக மூடும் வகையில் அணிவது கட்டாயம். முகக் கவசத்தை சரியான வகையில் பயன்படுத்தவில்லை என்றால் தொற்றுள்ள ஒருவரிடம் இருந்து கொரோனா பரவும் ஆபத்து உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்வதென்றால் மேலதிகமாக இரண்டு முகக் கவசங்களைக் கொண்டு செல்வது கட்டாயமாகும். அது உங்கள் சுகாதார பாதுகாப்புக்கு நல்லது என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (ந-இ)

## நேற்று 457...

கொழும்பு, ஒக்.28

நாட்டில் நேற்று மட்டும் 457 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொட, பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணிகளுடன் தொடர்புடைய 447 பேருக்கும், தனிமைப்படுத்தல் மையங்களில் உள்ள 10 பேருக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று இனங்காணப்பட்டவர்களுடன் சேர்ந்து மினுவாங்கொட, பேலியகொட கொரோனா கொத்தணிகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 393ஆக உயர்ந்துள்ளது. நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 870 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## முன்பள்ளி சிறார்களிடம் ஆக்கம் கோரல்

கொடிகாமம், ஒக்.28

கைதடி பிரதேசத்தைச் சேர்ந்த, 2021ஆம் ஆண்டு பாடசாலையில் இணையவுள்ள முன்பள்ளிச் சிறார்களிடம் இருந்து சஞ்சிகை ஆக்கம் கோரியுள்ளது கைதடி பொது நூலகம்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளிச் சிறுவர்களுக்கான சஞ்சிகை தயாரிக்கப்படவுள்ளது. சஞ்சிகைக்கான ஆக்கத்தைப் பெற்றோர்களின் வழிகாட்டலில் தயாரித்து கைதடி பொதுநூலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், மேலதிக விவரங்களை நூலகருடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-159)

**வாடகைக்கு வீடு தேவை**
யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் 03 அறைகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
**071 686 0044**

# இந்தியாவின் ஊக்குவிப்புக்களே சிங்களப் படையின் துணிவுக்கு காரணம்

## ராமதாஸ் விமர்சனம்

ஒருபுறம் இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தி வரும் வேளையில் மறுபுறம் அதனுடன் இணைந்து இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுகிறது. இந்தியாவின் இத்தகைய ஊக்குவிப்புகள்தான் தமிழக மீனவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் துணிச்சலை சிங்களப் படைக்கு அளிக்கிறது என ராமதாஸ் விமர்சனம் வெளியிட்டுள்ளார். தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளாதாவது,

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களை இனியும் மத்திய, மாநில அரசுகள் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. தமிழக மீனவர்கள் மீது கடந்த காலங்களில் சிங்களப் படையினர் நடத்திய தாக்குதல்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள்மீது நடவடிக்கை மேற்கொள்ள மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். அதுமட்டுமின்றி, டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

**அரசாங்க அறிவித்தல்**
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**
**நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021**

2021ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக 27.10.2020ம் திகதிய உதயன் பத்திரிகையில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக்குழுவினால் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பாக.

தற்போது நிலவிவரும் கொரோனா தொற்று அசாதாரண சூழ்நிலை காரணமாக சுகாதாரப் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு யாழ் மாவட்ட செயலகத்திற்கு நேரடியாக வருகை தருவதைத் தவிர்த்து மேற்படி பதிவிற்குரிய படிவங்களை வலைத்தளத்திலிருந்து (website) பதிவிறக்கம் செய்து பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

1. உரிய விபரங்களையும் தேவையான படிவங்களையும் யாழ் மாவட்ட செயலக அல்லது யாழ் மாவட்டத் திலுள்ள பிரதேச செயலகங்களின் வலைத்தளத்திலிருந்து (website) பதிவிறக்கம் செய்ய முடியும்.
   - யாழ் மாவட்ட செயலக வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் மேற்கொள்ள வேண்டிய படிமுறை (www.jaffna.dist.gov.lk > Procurement > Application forms, வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் 2021)
   - பிரதேச செயலக வலைத்தளத்திற்கு செல்வதற்கு உரிய பிரதேச செயலகத்தின் பெயரை கணணி வலைத்தளத்தில் (Browser) பதிவதன் மூலம் உரிய வலைத்தள விபரங்களை பெற முடியும்
2. செலுத்த வேண்டிய கட்டணங்களை அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், கணக்கு இலக்கம் 7041946 இலங்கை வங்கி, மேற்தரக்கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விபரத்திற்கு ஏதாவதொரு வங்கியில் செலுத்தி அதற்குரிய வங்கியின் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் **"2021ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களைப் பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. ஏதாவது விபரங்கள் தேவைப்படின் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகின் தொலைபேசி இலக்கம் 021 221 4633 இற்கு நேரடியாகவும் அல்லது வரவேற்புத் தொலைபேசி இல. 021 222 2233 தொடர்பு கொண்டு தொடர் இலக்கம் 140 உடன் இணைப்பை ஏற்படுத்தியும் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்

**பெறுகை அறிவித்தல்**
**சபைநிதி வேலைத்திட்டம் - 2020**
**நகராட்சி மன்றம் - சாவகச்சேரி**

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தர முன்னுரிமை என்பன கருத்திற்கொள்ளப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **2020.10.28**ஆம் திகதியிலிருந்து **2020.11.11** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணி முதல் **14.00** மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் **2020.10.28** ஆம் திகதியிலிருந்து **2020.11.11** ஆம் திகதி வரை மு.ப **9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு **2020.11.11** ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்வி தாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2020.12.30) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ 24Mn/15/2020 | மத்திய வீதி 1ஆம் வீதி புனரமைப்பு, மீசாலை கிழக்கு. | 0.924 | 02 மாதம் | C9/C8 | 9,500.00 | 2021.01.27 |
| 02 | NP/14/41(3)2/ 24Mn/16/2020 | கண்டுவில் 02 ஆம் ஒழுங்கை 01 ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு, கட்டம்-II சாவகச்சேரி நகரம். | 0.835 | 02 மாதம் | C9/C8 | 8,500.00 | 2021.01.27 |
| 03 | NP/14/41(3)2/ 24Mn/17/2020 | யாழ் வீதி குறுக்கு வீதி புனரமைப்பு (பாபு வீதி), நுணாவில் கிழக்கு. | 0.887 | 02 மாதம் | C9/C8 | 9,000.00 | 2021.01.27 |
| 04 | NP/14/41(3)2/ 24Mn/18/2020 | கச்சாய் வீதி இரண்டாம் ஒழுங்கை புனரமைப்பு, கோவிற்குடியிருப்பு | 0.401 | 02 மாதம் | C9/C8 | 4,100.00 | 2021.01.27 |
| 05 | NP/14/41(3)2/ 24Mn/19/2020 | காளியாமூலை வீதி புனரமைப்பு, கட்டம்-II, நுணாவில்மேற்கு. | 1.356 | 02 மாதம் | C9/C8 | 13,600.00 | 2021.01.27 |
| 06 | NP/14/41(3) 2/ CF/36/2020 | சாவகச்சேரி பொது நூலக புனரமைப்பு, சாவகச்சேரி நகரம். | 1.845 | 02 மாதம் | C9/C8 | 19,000.00 | 2021.01.27 |

கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2020.11.04 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.


தலைவர்,
பெறுகைக்குழு,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
2020.10.28

**அறிவித்தல்**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்**

2021 ஆம் ஆண்டிற்கான சாவகச்சேரி பிரதேச சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் இலக்க 168 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 28.10.2020 ஆம் திகதி தொடக்கம் 10.11.2020 ஆம் திகதி வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உபஅலுவலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்
சாவகச்சேரி பிரதேசசபை.
கொடிகாமம்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
09 . 04 . 1947

இறைவன் அடியில்
21 . 10 . 2018

## அமரர் நடராசா தேவராஜன்

(பணிப்பாளர் நாயகம், கட்டடத் திணைக்களம்)

ஈராண்டுகள் சென்றாலும்
இன்றளவும் உங்களை
பிரிந்த நாட்களில்
இருந்து மீள முடியாமல்
துயர்கின்றோம் நாம்.

*ஓம் சாந்தி சாந்தி சாந்தி !*

சகோதரிகள், மருமக்கள்
(துன்னாலை)

# ஹைதராபாத்திடம் மண்டியிட்டது டெல்லி

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் சகலதுறை ஆட்டமும் வோர்ணர், சஹா ஆகியோரின் அதிரடி ஆட்டமும் கைகொடுக்க 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது டெல்லி அணி .



ஐ.பி.எல் கிரிக்கெட் திருவிழாவின் டுபாயில் நேற்று நடைபெற்ற 47 ஆவது லீக் ஆட்டத்தில் டெல்லி கப்பிடல்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. முதலில் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு வோர்ணர் மற்றும் சஹா இணை ஆரம்பம் வழங்கியது. ஆரம்பம் முதலே டெல்லி பந்து வீச்சாளர்களின் பந்துகளை பவுண்டரி எல்லைக்கு வெளியே அனுப்புவதிலேயே இருவரும் குறியாக இருந்தனர்.




பந்துப்பரிமாற்ற ஓட்ட விகிதம் 10க்கு மேலேயே இருந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 107 ஆக இருக்க டேவிட் வோர்ணர் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் அதிரடியை தொடர்ந்த சஹா அரைச்சதம் கடந்து 12 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 87 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இறுதியில் இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகனை மாத்திரம் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மனிஷ் பாண்டே (44), வில்லியம்சன்(11) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருக்க பந்துவீச்சில் அஸ்வின், நொறிஜே தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர். 220 என்ற வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணியால் 131 ஓட்டங்களையே எட்ட முடிந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ரிஷப் பந்த் (36), ரகானே(26), துஷார் தேஷ் பாண்டே (20), ஹெட்மயர்(16) பெற்றனர். ஏனைய அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களையே பெற்றனர்.

பந்துவீச்சில் ரஷிட் கான் 3 இலக்குகளையும் சந்தீப் சர்மா,நடராஜன் தலா இரு இலக்குகளையும் நதீம், ஹோல்டர், விஜய் சங்கர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இறுதியில் டெல்லி அணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக விரித்மன் சஹா தெரிவானார்.

இன்றைய 48ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் அபுதாபி மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன. (ரி4)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ராச வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்பு சீர்செய்யப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
பிரித்து கொடுக்கப்படும் 1 ½ பரப்பாக.
தொடர்பு : குரு
077 805 1655

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டிபுரம் அபிராமி அம்மன் கோயிலுக்கு முன் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் ரூபா (300,000 ரூபா) தரகர் தேவையில்லை
தொடர்பு- குரு
0769986806

# ஆஸி. சுற்றுப் பயணத்துக்கு இந்திய அணியில் 32 வீரர்கள்

## கிரிக்கெட் சபை ஆலோசனை

புதுடில்லி, ஒக்.28

ஆ ஸ் தி ரே லி யா வி ல் சுற்றுப்பயணம் மேற்கொள்ள, 32 வீரர்கள் அடங்கிய மெகா இந்திய அணியைத் தேர்வு செய்யுமாறு கிரிக்கெட் சபை தேர்வுக் குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வரும் ஐ.பி.எல் ரி20 தொடர் முடிந்த பின்னர், விராட் கோலி தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியா சென்று ஒருநாள், ரி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டுள்ளது. நவம்பர் மாதம் தொடங்கி 2021 ஜனவரி வரை நடைபெறவுள்ள இந்த சுற்றுப் பயணத்தில் இந்திய அணி 3 ஒருநாள், 3 ரி20 மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக, கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் இருக்கின்றமையால் இந்தத் தொடர்களுக்கான இந்திய அணியில் மொத்தம் 32 வீரர்களைத் தேர்வுசெய்யுமாறு தேர்வுக் குழுவினருக்கு பி.சி.சி.ஐ தரப்பில் இருந்து ஆலோசனை கூறப்பட்டுள்ளது. தொடரின் இடையே எவருக்காவது தொற்று அல்லது காயம் ஏற்பட்டு விலக நேரிட்டால், மாற்று வீரரை உடனடியாக அனுப்புவது கடினம் என்பதால் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஒவ்வொரு வகை போட்டிக்குமான விசேட வீரர்களும் இந்த மெகா அணியில் இடம் பெறுவார்கள். இவர்களுடன் அணி நிர்வாகிகள், உதவியாளர்கள் என்று மிகப் பெரிய குழுவினர் ஆஸ்திரேலியா செல்ல உள்ளனர். எனினும், வீரர்களின் குடும்பத்தினருக்கு அனுமதி இல்லை. (ற)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை வழமைபோன்று நடைபெறுகின்றன.
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
0777554528, 0212227835

CHEMISTRY CLASS
பிரபல தனியார் கல்வி நிறுவன ஆசிரியரால் இரசாயனவியல் வகுப்புகள் 2022 Batch,2021 Batch,2020 Repeat Batch தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.
074 032 4986

வேலைவாய்ப்பு
நெல்லியடி நகரில் இயங்கிவரும் எமது கிளை நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
எழுதுவினைஞர் (இரவுநேரம்)
தகுதியானவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.
info@uthayan.com



உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## “தந்தையின் மந்திரச் சொல்” : உருகிய மன்தீப் சிங்

புதுடில்லி, ஒக்.28

.பி.எல் தொடரில் 100 ஓட்டங்களை அடித்தாலும் 00 ஓட்டங்களை அடித்தாலும் ஆட்டமிழக்காமல் விளையாடும்படி தன்னுடைய தந்தை தனக்கு தொடர்ந்து அறிவுறுத்தினார் என மன்தீப் சிங் தெரிவித்துள்ளார்.

ந்தநிலையில் நேற்றுமுன்தினம் கே.கே.ஆர் அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களை அடித்து அணியின் வெற்றிக்கு க்கிய காரணமாக இருந்தார் பஞ்சாப் அணியின் மன்தீப் சிங். இதன்மூலம் அந்த அணி ஐ.பி.எல் 2020 புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மன்தீப்பின் தந்தை கடந்த சனிக்கிழமை மரணமடைந்துள்ள நிலையில், அவர், சொந்த ஊருக்கு செல்லாமல் தொடர்ந்து விளையாடி வருகிறார். இந்த நிலையில் நேற்றைய போட்டியில் 49 பந்துகளில் அரைசதத்தைப் பூர்த்தி செய்த அவர், வானத்தை பார்த்து, தன்னுடைய தந்தைக்கு அந்த அரைசதத்தை அர்ப்பணித்தார். (ற)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.